# சித்தர் பாடல்கள்: சிவவாக்கியம் (ஆசிரியர் : சிவவாக்கியர்)

# civavAkkiyam of civavAkkiyAr In tamil script, unicode/utf-8 format

**Acknowledgements:**
We thank Mr. S. Anbumani for providing us with scanned image file version of this siddhar work. This work was prepared through the Distributed Proof-reading

approach of Project Madurai.
We also thank following persons for their help in the preparation of the etext:
S. Karthikeyan, Ms. Vijayalakshmi Periapoilan (keyin)
and S. Anbumani, V. Devarajan, S. Govindarajan for proof-reading.
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2006 .
Project Madurai is an open,

voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

## சித்தர் பாடல்கள்: சிவவாக்கியம்
## (ஆசிரியர் : சிவவாக்கியர்)

காப்பு
அரியதோர் நமச்சிவாயம்

ஆதியந்தம் ஆனதும்
ஆறிரண்டு நூறுதேவர்
அன்றுரைத்த மந்திரம்
சுரியதோர் எழுத்தைஉன்னிச்
சொல்லுவேன் சிவவாக்கியம்
தோஷதோஷ பாவமாயை
தூரதூர ஓடவே. 0

கரியதோர் முகத்தையொத்த
கற்பகத்தைக் கைதொழக்
கலைகள்நூல்கள் ஞானமும்
கருத்தில் வந்துதிக்கவே
பெரியபேர்கள் சிறியபேர்கள்
கற்றுணர்ந்த பேரெலாம்
பேயனாகி ஓதிடும்
பிழைபொறுக்க வேண்டுமே.
1

அக்ஷர நிலை

ஆனஅஞ் செழுத்துளே
அண்டமும் அகண்டமும்
ஆனஅஞ் செழுத்துளே
ஆதியான மூவரும்
ஆனஅஞ் செழுத்துளே
அகாரமும் மகாரமும்
ஆனஅஞ் செழுத்துளே
அடங்கலாவ லுற்றதே. 2
சரியை விலக்கல்

ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த
சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும்
கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி
மாண்டுபோன மாந்தர்கள்

கோடிகோடி கோடிகோடி
எண்ணிறந்த கோடியே. 3
யோக நிலை

உருத்தரித்த நாடியில்
ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே
கபாலம் ஏற்றவல்லீரேல்
விருத்தரரும் பாலராவீர்
மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர்பாதம்
அம்மைபாதம் உண்மையே. 4

தேகநிலை

வடிவுகண்டு
கொண்டபெண்ணை

மற்றொருவன் நத்தினால்
விடுவனோ அவனைமுன்னம்
வெட்டவேணும் என்பனே
நடுவன்வந்து அழைத்தபோது
நாறும்இந்த நல்லுடல்
சுடலைமட்டும்
கொண்டுபோய்த் தோட்டிகைக்
கொடுப்பாரே.
[நந்துதல் - இச்சை
கொள்ளுதல்; நடுவன் - எமன்] 5

## ஞான நிலை

என்னிலே இருந்தஒன்றை
யான்அறிந்தது இல்லையே
என்னிலே இருந்தஒன்றை
யான்அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்தஒன்றை

யாவர்காண வல்லரோ?
என்னிலே இருந்திருந்து
யான்உணர்ந்து கொண்டனே. 6

நினைப்பதொன்று கண்டிலேன்
நீயலாது வேறிலை,
நினைப்புமாய் மறப்புமாய்
நின்றமாயை மாயையோ?
அனைத்துமாய் அகண்டமாய்
அனாதிமுன் அனாதியாய்
எனக்குள்நீ உனக்குள்நான்
இருக்குமாற தெங்ஙனே. 7

மண்ணும்நீ அவ்விண்ணும்நீ
மறிகடல்கள் ஏழும்நீ;
எண்ணும்நீ எழுத்தும்நீ
இசைந்தபண் எழுத்தும்நீ;
கண்ணும்நீ மணியும்நீ

கண்ணுள் ஆடும் பாவைநீ-
நண்ணும்நீர்மை நின்றபாதம்
நண்ணுமாறு அருளிடாய். 8
அரியும்அல்ல அயனும்அல்ல
அப்புறத்தில் அப்புறம்
கருமைசெம்மை
வெண்மையைக் கடந்துநின்ற
காரணம்
பெரியதல்ல சிறியதல்ல
பற்றுமின்கள் பற்றுமின்
துரியமும் கடந்துநின்ற தூரதூர
தூரமே. 9
அந்திமாலை உச்சிமூன்றும்
ஆடுகின்ற தீர்த்தமும்
சந்திதர்ப் பணங்களும்
தபங்களும் செபங்களும்
சிந்தைமேவு ஞானமும்

தினம்செபிக்கு மந்திரம்
எந்தைராம ராமராம 10
ராமஎன்னும் நாமமே.
கதாவுபஞ்ச பாதகங்க
ளைத்துறந்த மந்திரம்
இதாம்இதாம் அதல்லஎன்று
வைத்துழலும் ஏழைகள்
சதாவிடாமல் ஓதுவார்
தமக்குநல்ல மந்திரம்
இதாம்இதாம் ராமராம
ராமஎன்னும் நாமமே.

11

நானதேது? நீயதேது?
நடுவில்நின்றது ஏதடா?
கோனதேது? குருவதேது?
கூறிடும் குலாமரே!
ஆனதேது? அழிவதேது?

அப்புறத்தில் அப்புரம்
ஈனதேது? ராமராம ராமஎன்ற 12
நாமமே!
யோக நிலை

சாத்திரங்கள் ஓதுகின்ற
சட்டநாத பட்டரே!
வேர்த்துஇரைப்பு வந்தபோது
வேதம்வந்து உதவுமோ?
மாத்திரைப்போ தும்முளே
யறிந்துதொக்க வல்லீரேல்
சாத்திரப்பைநோய்கள் ஏது?
சத்திமுத்தி சித்தியே! 13

நாலுவேதம் ஓதுவீர்,
ஞானபாதம் அறிகிலீர்.
பாலுள்நெய் கலந்தவாறு

பாவிகாள், அறிகிலீர்!
ஆலம்உண்ட கண்டனார்
அகத்துளே இருக்கவே
காலன்என்று சொல்லுவீர்,
கனவிலும் அஃதில்லையே. 14
வித்தில்லாத சம்பிரதாயம்
மேலும்இல்லை கீழுமில்லை
தச்சில்லாது மாளிகை
சமைந்தவாறும் அதெங்ஙனே?
பெற்றதாயை விற்றடிமை
கொள்ளுகின்ற பேதைகாள்!
சித்தில்லாத போதுசீவன்
இல்லைஇல்லை இல்லையே. 15
அஞ்சும்மூணும் எட்டாதாய்
அநாதியான மந்திரம்
நெஞ்சிலே நினைந்துகொண்டு
நீருருச் செபிப்பீரேல்

பஞ்சமான பாதகங்கள்
நூறுகோடி செய்யினும்
பஞ்சுபோல் பறக்கும்என்று
நான்மறைகள் பன்னுமே. 16

அண்டவாசல் ஆயிரம்
பிரசண்டவாசல் ஆயிரம்
ஆறிரண்டு நூறுகோடி
யானவாசல் ஆயிரம்
இந்தவாசல் ஏழைவாசல்
ஏகபோக மானதாய்
எம்பிரான் இருக்கும்வாசல்
யாவர்காண வல்லரே? 17

சாமம் நாலு வேதமும் சகல
சாத்திரங்களும்
சேமமாக ஓதினும் சிவனை நீர்
அறிகிலீர்
காமநோயை விட்டுநீர்

கருத்துளே உணர்ந்தபின்
ஊமையான காயமாய்
இருப்பன்எங்கள் ஈசனே! 18
சங்கிரண்டு தாரை ஒன்று
சன்னபின்னல் ஆகையால்
மங்கிமாளு தேஉலகில்
மானிடங்கள் எத்தனை?
சங்கிரண்டை யும்தவிர்த்து
தாரை ஊதவல்லீரேல்
கொங்கைமங்கை பங்கரோடு
கூடிவாழல் ஆகுமே. 19
அஞ்செழுத்தி லேபிறந்து
அவ்வஞ்செழுத்தி லேவளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற
பஞ்சபூத பாவிகாள்.
அஞ்செழுத்தில் ஓர்எழுத்து
அறிந்துகூற வல்லீரேல்!

அஞ்சல்அஞ்சல் என்றுநாதன்
அம்பலத்தில் ஆடுமே! 20
அஞ்சும்அஞ்சும் அஞ்சுமே
அனாதியானது அஞ்சுமே!
பிஞ்சுபிஞ்சது அல்லவோ
பித்தர்காள் பிதற்றுவீர்!
நெஞ்சில்அஞ்சு கொண்டுநீர்
நின்றுதொக்க வல்லீரேல்
அஞ்சும்இல்லை
ஆறும்இல்லை அனாதியாகித்
தோன்றுமே!
21

நீளவீடு கட்டுறீர் நெடுங்கதவு
சாத்துறீர்,
வாழவேணும் என்றலோ
மகிழ்ந்திருந்த மாந்தரே?
காலன்ஓசை வந்தபோது

கைகலந்து நின்றிடும்
ஆலம்உண்ட கண்டர்பாதம்
அம்மைபாதம் உண்மையே! 22

ஓடம்உள்ள போதெல்லாம் நீர்
ஓடியே உலாவலாம்;
ஓடம்உள்ள போதெலாம்
உறுதிபண்ணிக் கொள்ளலாம்;
ஓடமும்உடைந்த போதில்
ஒப்பிலாத வெளியிலே
ஆடும்இல்லை
கோலும்இல்லை
யாரும்இல்லை ஆனதே! 23

கிரியை நிலை

வீடெடுத்து வேள்விசெய்து
மெய்யனோடு பொய்யுமாய்
மாடுமக்கள் பெண்டிர்சுற்றம்

என்றிருக்கும் மாந்தர்காள்
நாடுபெற்ற நடுவர்கையில்
ஓலைவந்து அழைத்திடில்
ஓடுபெற்ற அவ்விலை
பெறாதுகாணும் உடலமே! 24

உற்பத்தி நிலை

அண்ணலே அனாதியே
அனாதிமுன் அனாதியே
பெண்ணும்ஆணும் ஒன்றலோ
பிறப்பதற்கு முன்னெலாம்
கண்ணிலாணின் சுக்கிலம்
கருவில்ஓங்கும் நாளிலே
மண்ணுளோரும்
விண்ணுளோரும் வந்தவாறு
எங்ஙனே? 25

அறிவு நிலை

பண்டுநான் பறித்தெறிந்த
பன்மலர்கள் எத்தனை?
பாழிலே செபித்துவிட்ட
மந்திரங்கள் எத்தனை?
மிண்டனாய்த் திரிந்தபோது
இறைத்தநீர்கள் எத்தனை?
மீளவும் சிவாலயங்கள் 26
சூழவந்தது எத்தனை?
அண்டர்கோன் இருப்பிடம்
அறிந்துஉணர்ந்த ஞானிகாள்
பண்டறிந்த பான்மைதன்னை
யார்அறிய வல்லரே?
விண்டவேதப்
பொருளைஅன்றி வேறு கூற
வகையிலாக்
கண்டகோயில் தெய்வம்என்று

கையெடுப்ப தில்லையே. 27

தூரம்தூரம் தூரம்என்று
சொல்லுவார்கள் சோம்பர்கள்
பாரும்விண்ணும் எங்குமாய்ப்
பரந்தஅப் பராபரம்
ஊருநாடு காடுமோடி
உழன்றுதேடும் ஊமைகாள்!
நேரதாக உம்முளே
அறிந்துணர்ந்து நில்லுமே! 28

தங்கம்ஒன்று ரூபம்வேறு
தன்மையான வாறுபோல்
செங்கண்மாலும் ஈசனும்
சிறந்திருந்த தெம்முளே
விங்களங்கள் பேசுவார்
விளங்குகின்ற மாந்தரே
எங்குமாகி நின்றநாமம்

நாமம்இந்த நாமமே! 29
நெருப்பைமூட்டி
நெய்யைவிட்டு நித்தம்நித்தம்
நீரிலே
விருப்பமொடு நீர்குளிக்கும்
வேதவாக்கியம் கேளுமின்;
நெருப்பும்நீரும் உம்முளே
நினைந்துகூற வல்லீரேல்
சுருக்கம்அற்ற சோதியைத்
தொடர்ந்துகூடல் ஆகுமோ! 30
பாட்டில்லாத பரமனைப்
பரமலோக நாதனை
நாட்டிலாத நாதனை
நாரிமங்கை பாகனை
கூட்டிமெள்ள வாய்புதைத்துக்
குணுகுணுத்த மந்திரம்
வேட்டகாரர் குசுகுசுப்பைக்

கூப்பிடா முகிழ்ந்சதே. 31
குசுகுசுப்பை - சுருக்குப்பை
தரிசனம்

செய்யதெங்கி லேஇளநீர்
சேர்த்தகார ணங்கள்போல்
ஐயன்வந்து என்னுளம்
புகுந்துகோயில் கொண்டனன்.
ஐயன்வந்து என்னுளம்
புகுந்துகோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தர்முன்னம்
வாய்திறப்ப தில்லையே. 32

அறிவு நிலை

மாறுபட்டு மணிதுலக்கி
வண்டின்எச்சில்
கொண்டுபோய்

ஊறுபட்ட கல்லின்மீதே
ஊற்றுகின்ற மூடரே.
மாறுபட்ட தேவரும்
அறிந்துநோக்கும் என்னையும்
கூறுபட்டுத் தீர்க்கவோ
குருக்கள்பாதம் வைத்ததே. 33

கோயிலாவது ஏதடா?
குளங்களாவது ஏதடா?
கோயிலும் குளங்களும்
கும்பிடும் குலாமரே!
கோயிலும் மனத்துளே
குளங்களும் மனத்துளே!
ஆவதும் அழிவதும்
இல்லைஇல்லை இல்லையே. 34
செங்கலும் கருங்கலும்
சிவந்தசாதி லிங்கமும்

செம்பிலும் தராவிலும்
சிவன்இருப்பன் என்கிறீர்
உம்மதம் அறிந்துநீர்
உம்மைநீர் அறிந்தபின்
அம்பலம் நிறைந்தநாதர் 35
ஆடல்பாடல் ஆகுமோ!

பூசைபூசை என்றுநீர்
பூசைசெய்யும் பேதைகாள்.
பூசையுள்ள தன்னிலே
பூசைகொண்டது எவ்விடம்?
ஆதிபூசை கொண்டதோ,
அனாதிபூசை கொண்டதோ?
ஏதுபூசை கொண்டதோ?
இன்னதென்று இயம்புமே! 36

இருக்குநாலு வேதமும்
எழுத்தை அறவோதினும்
பெருக்கநீறு பூசினும்

பிதற்றினும் பிரான்இரான்
உருக்கிநெஞ்சை
உட்கலந்திங்கு உண்மைகூற
வல்லீரேல்
சுருக்கம்அற்ற சோதியைத்
தொடர்ந்து கூடலாகுமோ! 37
கலத்தின்வார்த்து வைத்தநீர்
கடுத்ததீ முடுக்கினால்
கலத்திலே கரந்ததோ கடுத்ததீக்
குடித்ததோ
நிலத்திலே கரந்ததோ
நீள்விசும்பு கொண்டதோ
மனத்தின்மாயை நீக்கியே
மனத்துள்ளே கரந்ததோ! 38
பறைச்சியாவது ஏதடா?
பணத்தியாவது ஏதடா?
இறைச்சிதோல் எலும்பினும்

இலக்கமிட்டு இருக்குதோ?
பறைச்சிபோகம் வேறதோ
பணத்திபோகம் வேறதோ?
பறைச்சியும் பணத்தியும்
பகுத்துபாரும் உம்முளே! 39

வாயிலே குடித்தநீரை எச்சில்
என்று சொல்கிறீர்;
வாயிலே குதப்புவேத
மெனப்படக் கடவதோ?
வாயில்எச்சில் போகஎன்று
நீர்தனைக் குடிப்பீர்காள்
வாயில்எச்சில் போனவண்ணம்
வந்திருந்து சொல்லுமே!
40

ஓதுகின்ற வேதம்எச்சில்.,
உள்ளமந்திரங்கள் எச்சில்;
போதகங்க ளானஎச்சில்.,

பூதலங்கள் ஏழும்எச்சில்;
மாதிருந்த விந்துஎச்சில்.,
மதியும் எச்சில் ஒளியும்எச்சில்;
ஏதில்எச்சில் இல்லதில்லை
இல்லைஇல்லை இல்லையே! 41

பிறப்பதற்கு முன்னெல்லாம்
இருக்குமாற தெங்ஙனே?
பிறந்துமண் ணிறந்துபோய்
இருக்குமாறு தெங்ஙனே?
குறித்துநீர் சொலாவிடில்
குறிப்பில்லாத மாந்தரே.
அறுப்பென செவிஇரண்டும்
அஞ்செழுத்து வாளினால். 42

அம்பலத்தை அம்புகொண்டு
அசங்கென்றால் சங்குமோ?
கம்பமற்ற பாற்கடல்
கலங்கென்றால் கலங்குமோ?

இன்பமற்ற யோகியை
இருளும்வந்து அணுகுமோ?
செம்பொன் அம்பலத்துளே
தெளிந்த சிவாயமே. 43

சித்தம்ஏது, சிந்தைஏது
சீவன்ஏது! சித்தரே
சத்திஏது? சம்புஏது சாதிபேத
அற்றது
முத்திஏது? மூலம்ஏது மூலமந்
திரங்கள்ஏது?
வித்தில்லாத வித்திலே
இதினெனதென்று இயம்புமே. 44

ஒடுக்க நிலை

சித்தமற்றுச் சிந்தையற்றுச்
சீவனற்று நின்றிடம்
சத்தியற்றுச் சம்புவற்றுச்

சாதிபேத மற்றுநல்
மூத்தியற்று மூலமற்று
மூலமந்தி ரங்களும்
வித்தைஇத்தை ஈன்றவித்தில்
விலைந்ததே சிவாயமே. 45

கிரியை

சாதியாவது ஏதடா?
சலம்திரண்ட நீரெலாம்
பூதவாசல் ஒன்றலோ,
பூதம்ஐந்தும் ஒன்றலோ?
காதில்வாளில், காரை, கம்பி,
பாடகம்பொன் ஒன்றலோ?
சாதிபேதம் ஓதுகின்ற
தன்மைஎன்ன தன்மையோ?
46

அறிவு நிலை

கறந்தபால் முலைப்புகா,
கடைந்தவெண்ணெய்
மோர்புகா;
உடைந்துபோன சங்கின்ஓசை
உயிர்களும் உடற்புகா;
விரிந்தபூ உதிர்ந்தகாயும்
மீண்டுபோய் மரம்புகா;
இறந்தவர் பிறப்பதில்லை
இல்லைஇல்லை இல்லையே.
அறையினில் கிடந்தபோது
அன்றுதூய்மை என்றிலீர்,
துறைஅறிந்து நீர்குளித்த
அன்றுதூமை என்றிலீர்,
ப்றையறிந்து நீர்பிறந்த
அன்றுதூமை என்றிலீர்,
புரைஇலாத ஈசரோடு

பொருந்துமாறது எங்ஙனே. 48
தூமைதூமை என்றுளே
துவண்டுஅலையும் ஏழைகாள்!
தூமையான பெண்ணிருக்கத்
தூமைபோனது எவ்விடம்?
ஆமைபோல முழுகிவந்து
அனேகவேதம் ஓதுறீர்
தூமையும் திரண்டுருண்டு
சொற்குருக்கள் ஆனதே. 49
சொற்குருக்கள் ஆனதும்
சோதிமேனி ஆனதும்
மெய்க்குருக்கள் ஆனதும்
வேணபூசை செய்வதும்
சற்குருக்கள் ஆனதும்
சாத்திரங்கள் சொல்வதும்
செய்க்குருக்கள் ஆனதும்
திரண்டுருண்ட தூமையே. 50

கைவடங்கள் கண்டுநீர்
கண்சிமிட்டி நிற்கிறீர்?
எவ்விடங்கள் கண்டுநீர்
எண்ணிஎண்ணிப் பார்க்கிறீர்?
பொய்யுணர்ந்த சிந்தையைப்
பொருந்திநோக்க வல்லீரேல்
மெய்கடந்து உம்முளே
விரைந்து கூறல்ஆகுமே. 51

ஆடுகாட்டி வேங்கையை
அகப்படுத்து மாறுபோல்
மாடுகாட்டி என்னைநீ
மதிமயக்கல் ஆகுமோ,
கோடுகாட்டி யானையைக்
கொன்றுரித்த கொற்றவா,
வீடுகாட்டி என்னைநீ
வெளிப்படுத்த வேணுமே. 52

இடத்ததுன்கண் சந்திரன்,

வலத்ததுன்கண் சூரியன்
இடக்கைசங்கு சக்கரம்,
வலக்கைசூலம் மான்மழு;
எடுத்தபாதம் நீள்முடி,
எண்திசைக்கும் அப்புறம்,
உடல்கலந்து நின்றமாயம்
யாவர்காண வல்லரே? 53

நாழிஅப்பும் நாழிஉப்பும்
நாழியான வாறுபோல்
ஆழியோனும் ஈசனும்
அமர்ந்து வாழ்ந்திருந்திடம்
ஏறில்ஆறு ஈசனும் இயங்கு
சக்ரதரனையும்
வேறுகூறு பேசுவார்
வீழ்வர்வீண் நரகிலே. 54

தில்லைநாய கன்அவன்;
திருவரங் கனும்அவன்;

எல்லையான புவனமும்
ஏகமுத்தி யானவன்
பல்லுநாவும் உள்ளபேர்
பகுத்துகூறி மகிழுவார்;
வல்லபங்கள் பேசுவார்
வாய்புழுத்து மாய்வரே. 55

எத்திசைக்கும் எவ்வுயிர்க்கும்
எங்கள் அப்பன் எம்பிரான்
சத்தியான வித்துளே
முளைத்தெழும் அச்சுடர்
சித்தமும் தெளிந்துவேத
கோயிலும் திறந்தபின்
அத்தன்ஆடல் கண்டபின்
அடங்கல்ஆடல் காணுமே.
56

உற்றநூல்கள் உம்முளே
உணர்ந்துணர்ந்து பாடுவீர்;

பற்றறுத்து நின்றுநீர்
பராபரங்கள் எய்துவீர்;
செற்றமாவை யுள்ளரைச்
செருக்கறுத்து இருத்திடில்
சுற்றமாக உம்முளே
சோதிஎன்றும் வாழுமே. 57

போததாய் எழுந்ததும்
புனலதாகி வந்ததும்
தாததாய்ப் புகுந்ததும்
தணலதாய் விளைந்ததும்
ஓதடா அஞ்சுமூன்றும்
ஒன்றதான அக்கரம்
ஓதடாநீ இராமராம
ராமவென்னும் நாமமே. 58

அகாரம்என்ற அக்கரத்துள்
அவ்வுவந்து உதித்ததோ?
உகாரம்என்ற அக்கரத்துள்

உவ்வுவந்து உதித்ததோ?
அகாரமும் உகாரமும்
சிகாரமின்றி நின்றதோ?
விகாரமற்ற யோகிகாள்
விரித்துரைக்க வேணுமே. 59

அறத்திறங் களுக்கும்நீ,
அண்டம்எண் திசைக்கும்நீ,
திறத்திறங் களுக்குநீ,
தேடுவார்கள் சிந்தைநீ,
உறக்கம்நீ, உணர்வுநீ,
உட்கலந்த சோதிநீ
மறக்கொணாத நின்கழல்
மறப்பினும் குடிகொளே. 60

அண்டம்நீ அகண்டம்நீ,
ஆதிமூல மானநீ,
கண்டம்நீ, கருத்தும்நீ,
காவியங்க ளானநீ,

புண்டரீக மற்றுளே
உணருகின்ற புண்ணியர்,
கொண்டகோல மானநேர்மை
கூர்மைஎன்ன கூர்மையே. 61

மைஅடர்ந்த கண்ணினார்
மயக்கிடும் மயக்கிலே
ஐயிறந்து கொண்டுநீங்கள்
அல்லல்அற்று இருப்பீர்கள்
மெய்அறிந்த சிந்தையால்
விளங்குஞானம் எய்தினால்
உய்யறிந்து கொண்டுநீங்கள்
ஊழிகாலம் வாழ்வீரே. 62

கருவிருந்த வாசலால்
கலங்குகின்ற ஊமைகாள்
குருவிருந்து
சொன்னவார்த்தை
குறித்துநோக்க வல்லீரேல்

உருவிலங்கு மேனியாகி
உம்பராகி நின்றுநீர்
திருவிளங்கு மேனியாகச்
சென்றுகூடல் ஆகுமே! 63

தீர்த்தம்ஆட வேணுமென்று
தேடுகின்ற தீனர்காள்,
தீர்த்தம்ஆடல் எவ்விடம்
தெளிந்துநீர் இயம்புவீர்?
தீர்த்தமாக உம்முளே
தெளிந்துநீர் இருந்தபின்
தீர்த்தமாக உள்ளதும்
சிவாயஅஞ் செழுத்துமே! 64

கழுத்தையும் நிமிர்த்திநல்ல
கண்ணையும் விழித்துநீர்
பழுத்துவாய் விழிந்துபோன
பாவம் என்னபாவமே?

அழுத்தமான வித்திலே
அனாதியான இருப்பதோர்
எழுத்திலா எனழுத்திலோ 65
இருக்கலாம் இருந்துமே.
கண்டுநின்ற மாயையும்
கலந்துநின்ற பூதமும்
உண்டுறங்கு மாறுநீர்
உணர்ந்திருக்க வல்லீரேல்
பண்டைஆறும் ஒன்றுமாய்ப்
பயந்தவேத சுத்தனாய்
அண்டமுத்தி ஆகிநின்ற
ஆதிமூலம் மூலமே! 66
ஈன்றவாச லுக்குஇரங்கி
எண்ணிறந்து போவீர்காள்!
கான்றவாழை மொட்டலர்ந்த
காரணம் அறிகிலீர்
நான்றவாச லைத்திறந்து

நாடிநோக்க வல்லீரேல்,
தோன்றுமாயை
விட்டொழிந்து சோதிவந்து
தோன்றுமே. 67

உழலும்வாச லுக்குஇரங்கி
ஊசலாடும் ஊமைகாள்?
உழலும்வாச லைத்திறந்து
உண்மைசேர எண்ணிலீர்?
உழலும்வாச லைத்திறந்து
உண்மைநீர் உணர்ந்தபின்
உழலும்வாசல் உள்ளிருந்த
உண்மைதானும் ஆவிரே. 68

மூலநாடி தன்னிலே
முளைத்தெழுந்த சோதியை
நாலுநாழி உம்முளே நாடியே
இருந்தபின்
பாலனாகி வாழலாம்

பரப்பிரமம் ஆகலாம்;
ஆலம்உண்ட கண்டர்ஆணை
அம்மைஆணை உண்மையே. 69

இருக்கவேணும் என்றபோது
இருத்தலாய் இருக்குமோ?
மரிக்கவேணும் என்றலோ
மண்ணுளே படைத்தனர்?
சுருக்கமற்ற தம்பிரான்
சொன்னஅஞ் செழுத்தையும்
மரிக்குமுன் வணங்கிடீர்
மருந்தெனப் பதம்கெடீர். 70

அம்பத்தொன்று என
அடங்கலோர் எழுத்துளோ?
விண்பரந்த மந்திரம்
வேதம்நான்கும் ஒன்றலோ
விண்பரந்த மூலஅஞ்

செழுத்துளே முளைத்ததே
அங்கலிங்க பீடமாய் 71
அமர்ந்ததே சிவாயமே.

சிவாயம்என்ற அட்சரம்
சிவன்இருக்கும் அட்சரம்
உபாயம்என்று நம்புதற்கு
உண்மையான அட்சரம்
கபாடமற்ற வாசலைக்
கடந்துபோன வாயுவை
உபாயம்இட்டு அழைக்குமே
சிவாயஅஞ் செழுத்துமே. 72

உருவம்அல்ல,
வெளியும்அல்ல,
ஒன்றைமேவி நின்றதல்ல
மருவும்வாசல்
சொந்தம்அல்ல மற்றதல்ல
அற்றதல்ல

பெரியதல்ல சிறியதல்ல
பேசலான தானும்அல்ல
அரியதாகி நின்றநேர்மை
யாவர்காண வல்லரே? 73

ஆத்துமா அனாதியோ?
அனாத்துமா அனாதியோ?
பூத்திருந்த ஐம்பொறி
புலன்களும் அனாதியோ?
தர்க்கமிக்க நூல்களும்
சதாசிவமும் அனாதியோ?
வீக்கவந்த யோகிகாள்?
விரைந்துரைக்க வேணுமே! 74

அறிவிலே புறந்திருந்த
ஆகமங்கள் ஓதுறீர்;
நெறியிலே மயங்குகின்ற
நேர்மைஒன்று அரிகிலீர்;
உறியிலே தயிர்இருக்க

ஊர்புகுந்து
வெண்ணெய்தேடும்
அறிவிலாத மாந்தரோடு
அணுகுமாறது எங்ஙனே? 75

## அன்பு நிலை

இருவர்அரங்க மும்பொருந்தி
என்புருகி நோக்கிலீர்;
உருவரங்கம் ஆகிநின்ற
உண்மைஒன்றை ஓர்கிலீர்;
கருஅரங்கம் ஆகிநின்ற
கற்பனை கடந்துபின்
திருஅரங்கம் என்றுநீர்
தெளிந்திருக்க வல்லீரே! 76
கருக்குழியில் ஆசையாய்க்
காதலுற்று நிற்கிறீர்
குருக்கிடுக்கும் ஏழைகாள்

குலாவுகின்ற பாவிகாள்
திருத்திருத்தி மெய்யினால்
சிவந்தஅஞ் செழுத்தையும்
உருக்கழிக்கும் உம்மையும்
உணர்ந்துணர்ந்து
கொள்ளுமே. 77

மண்ணிலே பிறக்கவும்
வழக்கலாது உரைக்கவும்
எண்ணிலாத கோடிதேவர்
என்னதுஉன்னது என்னவும்
கண்ணிலேகண் மணிஇருக்கக்
கண்மறைத்த வாறுபோல்
எண்ணில்கோடி தேவரும்
இதன்கணால் விழிப்பதே. 78

அறிவு நிலை

மண்கலம் கவிழ்ந்தபோது

வைத்துவைத்து அடுக்குவார்
வெங்கலம் கவிழ்ந்தபோது
வேணும்என்று பேணுவார்;
நம்கலம் கவிழ்ந்தபோது
நாறும்என்று போடுவார்
எண்கலந்து நின்றமாயம்
என்னமாயம் ஈசனே. 79

மிக்கசெல்வம் நீபடைத்த
விறகுமேவிப் பாவிகாள்
விறகுடன் கொளுத்திமேனி
வெந்துபோவது அறிகிலீர்
மக்கள்பெண்டீர் சுற்றம்என்று
மாயைகாணும்
இவையெலாம்
மறலிவந்து அழைத்தபோது
வந்துகூடலாகுமோ? 80

விறகு - கர்வம்

ஒக்கவந்து மாதுடன்
செறிந்திடத்தில் அழகியே
ஒருவராகி இருவராகி
இளமைபெற்ற ஊரிலே
அக்கணிந்து கொன்றைசூடி
அம்பலத்தில் ஆடுவார்
அஞ்செழுத்தை ஓதிடில்
அனேகபாவம் அகலுமே. 81

மாடுகன்று செல்வமும்
மனைவிமைந்தர் மகிழவே
மாடமாளி கைப்புறத்தில்
வாழுகின்ற நாளிலே
ஓடிவந்து காலதூதர் சடுதியாக
மோதவே
உடல்கிடந்து உயிர்கழன்ற

உண்மைகண்டும் உணர்கிலீர்! 82

பாடுகின்ற உம்பருக்குள்
ஆடுபாதம் உன்னியே
பழுதிலாத கன்மகூட்டம்
இட்டஎங்கள் பரமனே
நீடுசெம்பொன் அம்பலத்துள்
ஆடுகொண்ட அப்பனே,
நீலகண்ட காலகண்ட
நித்தியகல் யாணனே. 83

கானமற்ற காட்டகத்தில்
வெந்தெழுந்த நீறுபோல்
ஞானம்உற்ற நெஞ்சகத்தில்
நல்லதேதும் இல்லையே;
ஊனமற்ற சோதியோடு
உணர்வுசேர்ந்து அடக்கினால்
தேன்அகத்தின் ஊறல்போல்
தெளிந்ததே சிவாயமே.

84

பருகிஓடி உம்முளே
பறந்துவந்த வெளிதனை
நிருவியே நினைந்துபார்க்கில்
நின்மனம் அதாகுமே.
உருகிஓடி எங்குமாய்
ஓடும்சோதி தன்னுளே
கருதுவீர் உமக்குநல்ல
காரணம் அதாகுமே. 85
சோதியாகி ஆகிநின்ற
சுத்தமும் பலித்துவந்து
போதியாத போதகத்தை
ஓதுகின்ற பூரணா,
வீதியாக ஓடிவந்து
விண்ணடியின் ஊடுபோய்
ஆதிநாதன் தன் நாதன்என்று
அனந்தகாலம் உள்ளதே

86

இறைவனால் எடுத்தமாடத்
தில்லையம் பலத்திலே
அறிவினால் அடுத்தகாயம்
அஞ்சினால் அமைந்ததே.
கருவிநாதம் உண்டுபோய்க்
கழன்றவாசல் ஒன்பதும்
ஒருவராய் ஒருவர்கோடி
உள்ளுளே அமர்ந்ததே. 87
நெஞ்சிலே இருந்திருந்து
நெருக்கிஓடும் வாயுவை
அன்பினால் இருந்துநீர்
அருகிருத்த வல்லீரேல்
அன்பர்கோயில் காணலாம்
அகலும்எண் திசைக்குளே
தும்பிஓடி ஓடியே சொல்லடா
சுவாமியே! 88

தில்லையை வணங்கிநின்ற
தெண்டனிட்ட வாயுவே
எல்லையைக் கடந்துநின்ற
ஏகபோக மாய்கையே
எல்லையைக் கடந்துநின்ற
சொர்க்கலோக வெளியிலே
வெள்ளையும் சிவப்புமாகி
மெய்கலந்து நின்றதே. 89

உடம்புஉயிர் எடுத்ததோ,
உயிர்உடம்பு எடுத்ததோ
உடம்புஉயிர் எடுத்தபோது
உருவம்ஏது செப்புவீர்
உடம்புஉயிர் இறந்தபோது
உயிர்இறப்பது இல்லையே
உடம்புமெய் மறந்துகண்டு
உணர்ந்துஞானம் ஓதுமே. 90

அவ்வெனும் எழுத்தினால்

அகண்டம்ஏழு ஆக்கினாய்;
உவ்வெனும் எழுத்தினால்
உருத்தரித்து நின்றனை;
மவ்வெனும் எழுத்தினால்
மயங்கினார்கள் வையகம்;
அவ்வும்உவ்வும் மவ்வுமாய்
அமர்ந்ததே சிவாயமே! 91
மந்திரங்கள் உண்டுநீர்
மயங்குகின்ற மானிடீர்!
மந்திரங்கள் ஆவதும்
மறத்தில்ஊறல் அன்றுகாண்;
மந்திரங்கள் ஆவது
மதத்தெழுந்த வாயுவை;
மந்திரத்தை உண்டவர்க்கு
மரணம்ஏதும் இல்லையே! 92
என்னஎன்று சொல்லுவேன்
இலக்கணம் இலாததை?

பன்னுகின்ற செந்தமிழ்ப்
பதம்கடந்த பண்பென
மின்னகத்தில் மின்ஒடுங்கி
மின்னதான வாறுபோல்
என்னகத்துள் ஈசனும்
யானும்அல்லது இல்லையே! 93

ஆலவித்தில் ஆல்ஒடுங்கி
ஆலமான வாறுபோல்
வேறுவித்தும் இன்றியே
விளைந்துபோகம் எய்திடீர்!
ஆறுவித்தை ஓர்கிலீர்
அறிவிலாத மாந்தரே!
பாரும்இத்தை உம்முளே
பரப்பிரமம் ஆனதே! 94

அவ்வுதித்த மந்திரம்
அகாரமாய் உகாரமாய்
எவ்வெழுத்து அறிந்தவர்க்கு

எழுபிறப்பது இங்கிலை?
சவ்வுதித்த மந்திரத்தைத்
தற்பரத்து இருத்தினால்
அவ்வும்உவ்வும் மவ்வுமாய்
அமர்ந்ததே சிவாயமே. 95

தற்பரம் - சுழிமுனை தானம்

நவ்விரண்டு காலதாய்,
நவின்றமவ் வயிறதாய்ச்
சிவ்விரண்டு தோளதாய்ச்
சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதாய்
அழுர்ந்துநின்ற நேர்மையில்
செவ்வைஒத்து நின்றதே
சிவாயஅஞ் செழுத்துமே. 96

இரண்டுமொன்று மூலமாய்

இயங்கு சக்கரத்துளே
சுருண்டுமூன்று வளையமாய்
சுணங்குபோல் கிடந்தநீ
முரண்டெழுந்த சங்கின்ஓசை
மூலநாடி ஊடுபோய்
அரங்கன் பட்டணத்திலே 97
அமர்ந்ததே சிவாயமே!
கடலிலே திரியும் ஆமை
கரையிலேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்தபோது
ரூபமான வாறுபோல்
மடலுளே இருக்கும்எங்கள்
மணியரங்க சோதியை
உடலுளே நினைந்துநல்ல
உண்மையானது
உண்மையே! 98
மூன்றுமண்ட லத்தினும்

முட்டிநின்ற தூணிலும்
நான்றபாம்பின் வாயிலும்
நவின்றெழுந்த அட்சரம்;
ஈன்றதாயும் அப்பனும்
எடுத்துரைத்த மந்திரம்;
தோன்றும்ஓர் எழுத்துளே
சொல்லஎங்கும் இல்லையே! 99

மூன்றுமூன்று மூன்றுமே
மூவர்தேவர் தேடிடும்
மூன்றும்அஞ் செழுத்துமாய்
முழங்கும் அவ்வெழுத்துளே
ஈன்றதாயும் அப்பனும்
இயங்குகின்ற நாதமும்
தோன்றும்மண்டலத்திலே
சொல்லஎங்கும் இல்லையே! 100

சோறுகின்ற பூதம்போல
சுணங்குபோல் கிடந்தநீர்

நாறுகின்ற கும்பியில்
நயந்தெழுந்த மூடரே,
சீறுகின்ற ஐவரைச்
சிணுக்கறுக்க வல்லீரேல்
ஆறுகோடி வேணியார்
ஆறில்ஒன்றில் ஆவிரே! 101
வட்டமென்று உம்முளே
மயக்கிவிட்ட திவ்வெளி
அட்டவக் கரத்துளே
அடக்கமும் ஒடுக்கமும்
எட்டும்எட்டும் எட்டுமாய்
இயங்கு சக்கரத்துளே
எட்டலாம் உதித்தது
எம்பிரானைநாம் அறிந்தபின். 102
பேசுவானும் ஈசனே,
பிரமஞானம் உம்முளே;
ஆசையான ஐவரும்

அலைந்தருள் செய்கிறார்;
ஆசையான ஐவரே
அடக்கிஓர் எழுத்திலே
பேசிடாது இருப்பிரேல்
நாதன்வந்து பேசுமே. 103

நமசிவாய அஞ்செழுத்தும்
நல்குமேல் நிலைகளும்
நமசிவாய அஞ்சில்அஞ்சும்
புராணமான மாயையும்
நமசிவாய அஞ்செழுத்து
நம்முளே இருக்கவே!
நமசிவாய உண்மையை
நன்குஉரைசெய் நாதனே! 104
பரம்உனக்கு எனக்குவேறு
பயம்இலை பராபரா!
கரம்எடுத்து நிற்றலும்
குவித்திடக் கடவதும்

சிரம்உருகி அமுதளித்த
சீருலாவு நாதனே;
உரம்எனக்கு நீ அளித்த
ஓம்நமசி வாயவே! 105

பச்சைமண் பதுப்பிலே
பழுப்பதிந்த வேட்டுவன்
நிச்சலும் நினைந்திட
நினைத்தவண்ணம் ஆயிடும்;
பச்சைமண் இடிந்துபோய்
பறந்ததும்பி ஆயிடும்
பிச்சர்காள் அறிந்துகொள்க
பிரான்இயற்று கோலமே. 106

ஒளியதான காசிமீது
வந்துதங்கு வோர்க்கெலாம்
வெளியதான சோதிமேனி
விஸ்வநாத னானவன்

தெளியுமங்கை உடன்இருந்து
செப்புகின்ற தாரகம்
எளியதோர் இராமராம 107
ராமமிர்த நாமமே.
விழியிலினோடு
புனல்விளைந்த வில்லவல்லி
யோனியும்
வெளியிலே பிதற்றலாம்
விளைவுநின்றது இல்லையே
வெளிபரந்த தேசமும்
வெளிக்குள்மூல வித்தையும்
தெளியும் வல்லஞானிகள்
தெளிந்திருத்தல் திண்ணமே. 108
ஓம்நமசி வாயமே
உணர்ந்துமெய் உணர்ந்தபின்
ஓம்நமசி வாயமே
உணர்ந்துமெய் தெளிந்தபின்

ஓம்நமசி வாயமே
உணர்ந்துமெய் உணர்ந்தபின்
ஓம்நமசி வாயமே உட்கலந்து
நிற்குமே! 109

அல்லல்வாசல் ஒன்பதும்
அருத்தடைந்த வாசலும்
சொல்லும்வாசல் ஓர் ஐந்தும்
சொம்மிவிம்மி நின்றதும்
நல்லவாச லைத்திறந்து
ஞானவாசல் ஊடுபோய்
எல்லைவாசல் கண்டவர்
இனிப்பிறப்பது இல்லையே. 110

ஆதியானது ஒன்றுமே
அநேக்அநேக ரூபமாய்
சாதிபேத மாய்எழுந்து
சர்வசீவன் ஆனபின்
ஆதியோடு இருந்துமீண்டு

எழுந்துசென்மம் ஆனபின்
சோதியான ஞானியாகிச்
சுத்தமாய் இருப்பனே. 111

மலர்ந்ததாது மூலம்மாய்
இவ்வையகம் மலர்ந்ததும்
மலர்ந்தபூ மயக்கம்வந்து
அருத்ததும் விடுத்ததும்
புலன்கள்ஐந்தும்
பொறிகலங்கி பூமிமேல்
விழுந்ததும்
இலங்கலங்கி நின்றமாயம்
என்னமாயம் ஈசனே. 112

பாரடங்க உள்ளதும்
பரந்தவானம் உள்ளதும்
ஓரிடமும் இன்றியே
ஒன்றிநின்ற ஒண்சுடர்
ஆரிடமும் இன்றியே

அகத்துளும் புறத்துளும்
சீரிடங்கள் கண்டவன்
சிவன்தெரிந்து ஞானியே! 113
மண்கிடார மேசுமந்து
மலையுள்ஏறி மறுகுறீர்,
எண்படாத காரியங்கள்
இயலும் என்று கூறுகிறீர்,
தம்பிரானை நாள்தோறும்
தரையிலே தலைபடக்
கும்பிடாத மாந்தரோடு
கூடிவாழ்வது எங்ஙனே? 114

நாவில்நூல் அழிந்ததும்
நலம்குலம் அழிந்ததும்
மேவுதேர் அழிந்ததும்
விசாரம் குறைந்ததும்
பாவிகாள் இதென்னமாயம்
வாமநாடு பூசலாய்

ஆவியார் அடங்குநாளில்
ஐவரும் அடங்குவார். 115
இல்லைஇல்லை என்றுநீர்
இயம்புகின்ற ஏழைகாள்,
இல்லைஎன்று
நின்றதொன்றை இல்லை
என்னலாகுமோ?
இல்லைஅல்ல ஒன்றுமல்ல
இரண்டும்ஒன்றி நின்றதை
எல்லைகண்டு கொண்டபேர்
இனிப்பிறப்பது இல்லையே. 116
காரகார காரகார காவல்ஊழி
காவலன்
போரபோர போரபோர
போரில்நின்ற புண்ணியன்
மாரமார மாரமார
மரங்கள்ஏழும் எய்தசீ

ராமராம ராமராம
ராமஎன்னும் நாமமே. 117
நீடுபாரி லேபிறந்து நேரமான
காயந்தான்
வீடுபேறி தென்றபோது
வேண்டிஇன்பம்
வேண்டுமோ?
பாடிநாலு வேதமும் பாரிலே
படர்ந்ததோ?
நாடுராம ராமராம
ராமமென்னுன் நாமமே! 118
உயிருநன்மை யால்உடல்
எடுத்துவந்து இருந்திடும்!
உயிர்உடம்பு ஒழிந்தபோது
ரூபரூப மாயிடும்
உயிர்சிவத்தின் மாயைஆகி
ஒன்றைஒன்று கொன்றிடும்

உயிரும்சத்தி மாயைஆகி
ஒன்றைஒன்று தின்னுமே. 119

நெட்டெழுத்து வட்டமே
நிறைந்தவல்லி யோனியும்,
நெட்டெழுத்து வட்டமொன்று
நின்றதொன்று கண்டிலேன்
குற்றெழுத்தில் உற்றதென்று
கொம்புகால் குறித்திடில்
நெட்டெழுத்தில்
வட்டம்ஒன்றில் நேர்படான்
நம்ஈசனே! 120

விண்ணிலுள்ள தேவர்கள்
அறியொணாத
மெய்ப்பொருள்
கண்ணிலாணி யாகவே
கலந்துநின்ற தெம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து

மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரும் எம்முளே
அமர்ந்துவாழ்வ துண்மையே. 121

விண்கடந்து நின்றசோதி
மேலைவாச லைத்திறந்து
கண்களிக்க உள்ளுளே
கலந்துபுக் கிருந்தபின்
மண்பிறந்த மாயமும்
மயக்கமும் மறந்துபோய்
எண்கலந்த ஈசனோடு
இசைந்திருப்பது
உண்மையே. 122

மூலமான மூச்சதில்
மூச்சறிந்து விட்டபின்
நாளுநாளு முன்னிலொரு
நாட்டமாகி நாட்டிடில்
பாலனாகி நீடலாம்

பரப்பிரமம் ஆகலாம்
ஆலம்உண்ட கண்டர்ஆணை
அம்மைஆணை
உண்மையே! 123

மின்எழுந்து மின்பரந்து
மின்ஒடுங்கு மாறுபோல்
என்னுள்நின்ற என்னுள்ஈசன்
என்னுள்ளே அடங்குமே,
கண்ணுள்நின்ற கண்ணில்நேர்
மைகண்அறி விலாமையால்
என்னுள்நின்ற
வென்னையன்றி
யான்அறிந்ததில்லையே! 124

இருக்கலாம் இருக்கலாம்
அவனியில் இருக்கலாம்,

அரிக்குமால் பிரமனும்
அண்டம்ஏழு அகற்றலாம்.
கருக்கொளாத குழியிலே
காலிலாத தூணிலே
நெருப்பறை திறந்தபின்பு 125
நீயும்நானும் ஈசனே!
ஏகபோகம் ஆகியே
இருவரும் ஒருவராய்
போகமும் புணர்ச்சியும்
பொருந்துமாறது எங்ஙனே?
ஆகலும் அழிதலும்
அதன்கண்ணேயம் ஆனபின்
சாகலும் பிறத்தலும்
இல்லைஇல்லை இல்லையே! 126
வேதம்நாலும் பூதமாய்
விரவும்அங்கு நீரதாய்ப்
பாதமே இலிங்கமாய்ப்

பரிந்தபூசை பண்ணினால்
காதினின்று கடைதிறந்து
கட்டறுத்த ஞானிகள்
ஆதிஅந்த மும்கடந்து
அரியவீடு அடைவரே! 127

பருத்திநூல் முறுக்கிவிட்டுப்
பஞ்சிஓதும் மாந்தரே!
துருத்திநூல் முறுக்கிவிட்டுத்
துன்பம்நீங்க வல்லீரேல்
கருத்தில்நூல் கலைப்படு
காலநூல் கழிந்திடும்
திருத்திநூல் கவலறும்
சிவாயஅஞ்சு எழுத்துமே. 128

சாவதான தத்துவச்
சடங்குசெய்யும் ஊமைகாள்
தேவர்கல்லும் ஆவரோ?
சிரிப்பதன்றி என்செய்வேன்?

மூவராலும் அறியொணாத
முக்கணன்முதற் கொழுந்து
காவலாக உம்முளே
கலந்திருப்பன் காணுமே. 129

காலைமாலை நீரிலே
முழுகும்அந்த மூடர்காள்
காலைமாலை நீரிலே
கிடந்ததேரை என்பெறும்
காலமே எழுந்திருந்து
கண்கள்மூன்றில் ஒன்றினால்
மூலமே நினைப்பிராகில்
முத்திசித்தி யாகுமே. 130

எங்கள்தேவர் உங்கள்தேவர்
என்றிரண்டு தேவரோ?
அங்கும்இங்கு மாய்இரண்டு
தேவரே இருப்பரோ?

அங்கும்இங்கும் ஆகிநின்ற
ஆதிமூர்த்தி ஒன்றலோ?
வங்கவாரம் சொன்னபேர்கள்
வாய்புழுத்து மாள்வரே. 131

அறையறை இடைக்கிடந்த
அன்றுதூமை என்கிறீர்;
முறைஅறிந்து பிறந்தபோதும்
அன்றுதூமை என்கிறீர்
துறைஅறிந்து நீர்குளித்தால்
அன்றுதூமை என்கிறீர்
பொறைஇலாத நீசரோடும்
பொருந்துமாறது எங்ஙனே? 132

சத்தம்வந்த வெளியிலே
சலமிருந்து வந்ததும்
மத்தமாகி நீரிலே
துவண்டுமூழ்கும் மூடரே!
சுத்தம்ஏது? கட்டதேது?

தூய்மைகண்டு நின்றதுஏது?
பித்தர்காயம் உற்றதேது
பேதம்ஏது போதமே? 133

மாதாமாதம் தூமைதான்,
மறந்துபோன தூமைதான்
மாதம்அற்று நின்றுலோ
வளர்ந்துரூபம் ஆனது?
நாதம்ஏது, வேதம்ஏது,
நற்குலங்கள் ஏதடா?
வேதம்ஓதும் வேதியர்
விளைந்தவாறு பேசடா? 134
தூமைஅற்று நின்றலோ
சுதீபமுற்று நின்றது?
ஆண்மைஅற்று நின்றலோ
வழக்கமற்று நின்றது?
தாண்மைஅற்று

ஆண்மைஅற்று சஞ்சலங்கள்
அற்றுநின்ற
தூமைதூமை அற்றகாலம் 135
சொல்லும்அற்று நின்றதே!
ஊறிநின்ற தூமையை
உறைந்துநின்ற சீவனை
வேறுபேசி மூடரே
விளைந்தவாறது ஏதடா?
நாறுகின்ற தூமையல்லோ
நற்குலங்கள் ஆவன?
சீறுகின்ற மூடனே
அத்தூமைநின்ற் கோலமே. 136

தீமைகண்டு நின்றபெண்ணின்
தூமைதானும் ஊறியே
சீமைஎங்கும்
ஆணும்பெண்ணும்

சேர்ந்துலகம் கண்டதே.
தூமைதானும் ஆசையாய்
துறந்திருந்த சீவனை
தூமைஅற்று கொண்டிருந்த 137
தேசம்ஏது தேசமே?
வேணும்வேணும் என்றுநீர்
வீண்உழன்று தேடுவீர்?
வேணும்என்று தேடினும்
உள்ளதல்லது இல்லையே,
வேணும் என்று தேடுகின்ற
வேட்கையைத் துறந்தபின்
வேணும்என்ற அப்பொருள்
விரைந்துகாணல் ஆகுமே!
138

சிட்டர்ஓது வேதமும்
சிறந்ததாக மங்களும்
நட்டகார ணங்களும்

நவின்றமெய்மை நூல்களும்
கட்டிவைத்த போதகம்
கதைக்குகந்த பித்தெலாம்
பொட்டதாய் முடிந்ததே
பிரானையான் அறிந்தபின்! 139

நூறுகோடி ஆகமங்கள்
நூறுகோடி மந்திரம்
நூறுகோடி நாள்இருந்து
ஓதினால் அதுஎன்பயன்?
ஆறும்ஆறும் ஆறுமாய்
அகத்தில்ஓர் எழுத்துமாய்
ஏறுசீர் எழுத்தைஓத
ஈசன்வந்து பேசுமே! 140

காலைமாலை தம்மிலே
கலந்துநின்ற காலனார்
மாலைகாலை யாச்சிவந்த
மாயம்ஏது செப்பிடீர்?

காலைமாலை அற்றுநீர்
கருத்திலே ஒடுங்கினால்
காலைமாலை ஆகிநின்ற
காலன்இல்லை இல்லையே. 141

எட்டுமண்ட லத்துளே
இரண்டுமண்டலம் வளைத்து
இட்டமண்ட லத்துளே
எண்ணிஆறு மண்டலம்
தொட்டமண்ட லத்திலே
தோன்றிமூன்று மண்டலம்
நட்டமண்ட லத்துளே
நாதன்ஆடி நின்றதே! 142
நாலிரண்டு மண்டலத்துள்
நாதன்நின்றது எவ்விடம்?
காலிரண்டு மூலநாடி
கண்டதங்கு உருத்திரன்;
சேலிரண்டு கண்கலந்து

திசைகள் எட்டுமூடியே
மேலிரண்டு தான்கலந்து
வீசிஆடி நின்றதே. 143

அம்மைஅப்பன் உப்புநீர்
அறிந்ததே அறிகிலீர்;
அம்மைஅப்பன் உப்புநீர்
அரிஅயன் அரனுமாய்
அம்மைஅப்பன் உப்புநீர்
ஆதியாதி ஆனபின்
அம்மைஅப்பன்
நின்னைஅன்றி
யாரும்இல்லை ஆனதே. 144

உருத்தரிப்ப தற்குமுன்
உடல்கலந்தது எங்ஙனே?
கருத்தரிப்ப தற்குமுன்
காரணங்கள் எங்ஙனே?

பொருத்திவைத்த போதமும்
பொருந்துமாறது எங்ஙனே?
குருத்திருத்தி வைத்தசொல் 145
குறித்துணர்ந்து கொள்ளுமே!
ஆதிஉண்டு அந்தம்இல்லை
அன்றுநாலு வேதம் இல்.
சோதிஉண்டு
சொல்லுமில்லை
சொல்லிறந்த தேதுமில்;
ஆதியான மூவரில்
அமர்ந்திருந்த வாயுவும்
ஆதிஅன்று தன்னையும்
யார்அறிவது அண்ணலே? 146
புலால்புலால் புலால்
அதென்று பேதமைகள்
பேசுகிறீர்?
புலாலைவிட்டு எம்பிரான்

பிரிந்திருந்தது எங்ஙனே?
புலாலுமாய்ப் பிதற்றுமாய்
பேருலாவும் தானுமாய்ப்
புலாலிலே முளைத்தெழுந்த
பித்தன்காணும் அத்தனே! 147

உதிரமான பால்குடித்து
ஒக்கநீர் வளர்ந்ததும்
இதரமாய் இருந்ததுஒன்று
இரண்டுபட்டது என்னலாம்
மதிரமாக விட்டதேது
மாங்கிசப்புலால் அதென்?
சதிரமாய் வளர்ந்ததேது
சைவரான மூடரே? 148

உண்டகல்லை எச்சில்என்று
உள்ளெறிந்து போடுகிறீர்;
கண்டஎச்சில் கையலோ

பரமனுக்கும் வேறதோ?
கண்டஎச்சில் கேளடா,
கலந்தபாணி அப்பிலே
கொண்டசுத்தம் ஏதடா? 149
குறிப்பிலாத மூடரே!

ஓதிவைத்த நூல்களும்
உணர்ந்துகற்ற கல்வியும்
மாதுமக்கள் சுற்றமும்
மறக்கவந்த நித்திரை
ஏதுபுக் கொளித்ததோ
எங்குமாகி நின்றதோ?
சோதிபுக் கொளித்தமாயம்
சொல்லடா சுவாமியே! 150

ஈரொருமையின் கழுத்தில்
இட்டபொட்ட ணங்கள்போல்
மூணுநாலு சீலையில்

முடிந்தவழ்க்கும் மூடர்காள்,
மூணுநாலு லோகமும்
முடிவிலாத மூர்த்தியை
ஊணிஊணி நீர்முடித்த 151
உண்மைஎன்ன உண்மையே?

சாவல்நாலு குஞ்சதஞ்சு
தாயதான வாறுபோல்
காவலான கூட்டிலே
கலந்துசண்டை கொள்ளுதே!
கூவமான் கிழநரியக்
கூட்டிலே புகுந்தபின்
சாவல்நாலும் குஞ்சதஞ்சும்
தான் இறந்து போனவே! 152

மூலமாம் குளத்திலே
முளைத்தெழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து
நாலுகட்டு அறுப்பீரேல்

பாலனாகி வாழலாம்
பரப்பிரமம் ஆகலாம்;
ஆலம்உண்ட கண்டர்பாதம்
அம்மைபாதம் உண்மையே! 153

செம்பினில் களிம்புவந்த
சீதரங்கள் போலவே
அம்பினில் எழுதொணாத
அணியரங்க சோதியை
வெம்பிவெம்பி வெம்பியே
மெலிந்துமேல் கலந்திட
செம்பினில் களிம்புவிட்ட 154
சேதிஏது காணுமே!
அணி அரங்கம் - அழகிய
சிற்றம்பலம்

நாடிநாடி நம்முளே

நயந்துகாண வல்லீரேல்
ஓடிஓடி மீளுவான் உம்முளே
அடங்கிடும்
தேடிவந்த காலனும்
திகைத்திருந்து போய்விடும்
கோடிகோடி காலமும் 155
குறைவிலாது இருப்பிரே!

பிணங்குகின்றது ஏதடா?
பிரக்ஞைகெட்ட மூடரே?
பிணங்கிலாத பேரொளி
பிராணனை அறிகிலீர்.
பிணங்கும்ஓர் இருவினைப்
பிணக்கறுக்க வல்லீரேல்!
பிணங்கிலாத பெரியஇன்பம்
பெற்றிருக்க லாகுமே! 156

மீன்இறைச்சி தின்றதில்லை
அன்றும்இன்றும் வேதியர்?

மீன்இருக்கும் நீரலோ
மூழ்வதும் குடிப்பதும்
மான்இறைச்சி தின்றதில்லை
அன்றும்இன்றும் வேதியர்,
மான்உரித்த தோலலோ
மார்புநூல் அணிவதும். 157

ஆட்டிறைச்சி தின்றதில்லை
அன்றும்இன்றும் வேதியர்
ஆட்டிறைச்சி அல்லவோ
யாகம்நீங்கள் ஆற்றலோ?
மாட்டிறைச்சி தின்றதில்லை
அன்றும்இன்றும் வேதியர்
மாட்டிறைச்சி அல்லவோ
மரக்கறிக் கிடுவது? 158

அக்கிடீர் அனைத்துயிர்க்கும்
ஆதியாகி நிற்பது
முக்கிடீர் உமைப்பிடித்து

முத்தரித்து விட்டது,
மைக்கிடீர் பிறந்துஇறந்து
மாண்டுமாண்டு போவது,
மொக்கிடீர் உமக்குநான்
உணர்த்துவித்தது
உண்மையே. 159

ஐயன்வந்து மெய்யகம்
புகுந்தவாறது எங்ஙனே?
செய்யதெங்கு
இளங்குரும்பை நீர்புகுந்த
வண்ணமே.
ஐயன்வந்து
மெய்யகம்புகுந்து கோயில்
கொண்டபின்
வையகத்தில் மாந்தரோடு
வாய்திறப்பது இல்லையே! 160

நவ்வுமவ்வை யும்கடந்து
நாடொணாத சியின்மேல்
வவ்வுயவ்வு ளும்சிறந்த
வண்மைஞான போதகம்
ஒவ்வுசத்தி யுள்நிறைந்து
உச்சியூ டுருவியே
இவ்வகை அறிந்தபேர்கள் 161
ஈசன்ஆணை ஈசனே.

அக்கரம் அனாதியோ?
ஆத்துமம் அனாதியோ?
புக்கிருந்த பூதமும்
புலன்களும் அனாதியோ?
தர்க்கமிக்க நூல்களும்
சாத்திரம் அனாதியோ?
தற்பரத்தை ஊடறுத்த சற்குரு
அனாதியோ? 162
பார்த்ததேது? பார்த்திடில்

பார்வையூ டழிந்திடும்
கூர்த்ததாய் இருப்பிரேல்
குறிப்பில்அச் சிவமதாம்;
பார்த்தபார்த்த போதெல்லாம்
பார்வையும் இகந்துநீர்
பூத்தபூவுங் காயுமாய்
பொருந்துவீர் பிறப்பிரே. 163

நெற்றிபற்றி உழலுகின்ற
நீலமா விளக்கினைப்
பத்திஒத்தி நின்றுநின்று
பற்றறுத்தது என்பலன்
உற்றிருநந்து பாரடா,
உள்ஒளிக்கு மேல்ஒளி
அத்தனார் அமர்ந்திடம்
அரிந்தவன் அனாதியே. 164

நீரைஅள்ளி நீரில்விட்டு
நீர்நினைந்த காரியம்

ஆரைஉன்னி நீரெல்லாம்
அவத்திலே இறைக்கிறீர்?
வேரைஉன்னி வித்தைஉன்னி
வித்திலே முளைத்தெழும்
சீரைஉன்ன வல்லீரேல்
சிவபதங்கள் சேரலாம்! 165
நெற்றியில் தயங்குகின்ற
நீலமாம் விளக்கினை
உய்த்துணர்ந்து பாரடா,
உள்ளிருந்த சோதியைப்
பத்தியில் தொடர்ந்தவர்
பரமயம் அதானவர்
அத்தலத்தில் இருந்தபேர்கள் 166
அவர்எனக்கு நாதரே.
கருத்தரிக்கு முன்னெலாம்
காயம்நின்றது எவ்விடம்?
உருத்தரிக்கு முன்னெலாம்

உயிர்ப்புநின்றது எவ்விடம்?
அருள்தரிக்கு முன்னெலாம்
ஆசைநின்றது எவ்விடம்?
திருக்கறுத்துக் கொண்டதே
சிவாயம்என்று கூறுவீர். 167

கருத்தரிக்கு முன்னெலாம்
காயம்நின்றது தேயுவில்,
உருத்தரிக்கு முன்னெலாம்
காயம்நின்ற தேயுவில்
அருள்தரிக்கு முன்னெலாம்
ஆசைநின்றது வாயுவில்
திருக்கறுத்துக் கொண்டதே
சிவாயம் என்று கூறுவீர். 168

திருக்கு - சந்தேகம்

தாதரான தாதரும்

தலத்தில்உள்ள சைவரும்
கூதரைப் பறைச்சிமக்கள்
கூடிசெய்த காரியம்
வீதிபோகும் ஞானியை
விரைந்துகல் எறிந்ததும்
பாதகங்கள் ஆகவே
பலித்ததே சிவாயமே. 169

ஓடிஓடி பாவிழைத்து
உள்ளங்கால் வெளுத்ததும்
பாவியான பூனைவந்து
பாலிலே குதித்ததும்
பணிக்கன்வந்து பார்த்ததும்
பாரம்இல்லை என்றதும்
இழைஅறுந்து போனதும்
என்னமாயம் ஈசனே? 170

சதுரம்நாலு மறையும்எட்டு
தானதங்கி மூன்றுமே

எதிரதான வாயுவாறு
என்னும்வட்ட மேவியே.
உதிரதான வரைகள்எட்டும்
எண்ணும்என் சிரசின்மேல்
கதிரதான காயகத்தில்
கலந்தெழுந்த நாதமே. 171

நாலொடாறு பத்துமேல்
நாலுமூன்றும் இட்டபின்
மேலுபத்து மாறுடன்
மேதிரண்ட தொன்றுமே
கோலிஅஞ் செழுத்துளே
குருஇருந்து கூறிடில்
தோலுமேனி நாதமாய்த்
தோற்றிநின்ற கோசமே. 172

கோசமாய் எழுந்ததும்
கூடுருவி நின்றதும்
தேசமாய்ப் பிறந்ததும்

சிவாயம்அஞ் செழுத்துமே
ஈசனார் அருந்திட
அனேகனேக மந்திரம்
ஆசயம் நிறைந்துநின்ற
ஐம்பத்தோர் எழுத்துமே. 173
அங்கலிங்க பீடமாய்
ஐயிரண்டு எழுத்திலும்
பொங்குதா மரையினும்
பொருந்துவார் அகத்தினும்
பங்குகொண்ட சோதியும்
பரந்தஅஞ்சு எழுத்துமே
சிங்கநாத ஓசையும் சிவாயம்
அல்லது இல்லையே. 174
உவமையிலாப்
பேரொளிக்குள் உருவமானது
எவ்விடம்?
உவமையாகி அண்டத்தில்

உருவிநின்றது எவ்விடம்?
தவமதான பரமனார்
தரித்துநின்றது எவ்விடம்?
தற்பரத்தில் சலம்பிறந்து 175
தங்கிநின்றது எவ்விடம்?
ககமாக எருதுமூன்று
கன்றைஈன்றது எவ்விடம்?
சொல்லுகீழு லோகம்ஏழும்
நின்றவாறது எவ்விடம்?
அவனும்அவளும் ஆடலால்
அருஞ்சிவன் பிறந்ததே,
அவள்தான் மேருவும்
அவமைதானது எவ்விடம்? 176
உதிக்கநின்றது எவ்விடம்?
ஒடுங்குகின்றது எவ்விடம்?
கதிக்கநின்றது எவ்விடம்?
கண்ணுறக்கம் எவ்விடம்?

மதிக்கநின்றது எவ்விடம்?
மதிமயக்கம் எவ்விடம்?
விதிக்கவல்ல ஞானிகள்,
விரிந்துரைக்க வேணுமே. 177

திரும்பியாடு வாசல்எட்டு
திறம்உரைத்த வாசல்எட்டு,
மருங்கிலாத கோலம்எட்டு
வன்னியாடு வாசல்எட்டு,
துரும்பிலாத கோலம்எட்டு
சுற்றிவந்த மருளரே!
அரும்பிலாத பூவும்உண்டு
ஐயன்ஆணை உண்மையே!
178

தானிருந்து மூலஅங்கி
தணல்எழுப்பி வாயுவால்
தேனிருந்து அறைதிறந்து
தித்திஒன்று ஒத்ததே

வானிருந்து மதியமூன்று
தண்டலம் புகுந்தபின்
ஊனிருந்து அளவுகொண்ட
யோகிநல்ல யோகியே! 179
முத்தனாய் நினைந்தபோது
முடிந்தஅண்டத் துச்சிமேல்
பத்தனாரும் அம்மையும்
பரிந்துஆடல் ஆடினார்,
சித்தரான ஞானிகள்,
தில்லைஆடல் என்பீர்காள்!
அத்தன்ஆடல் உற்றபோது
அடங்கல்ஆடல் உற்றவே. 180
ஒன்றும்ஒன்றும் ஒன்றுமே
உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும்இன்றும் ஒன்றுமே
அனாதியானது ஒன்றுமே
கன்றல்நின்ற செம்பொனைக்

களிம்பறுத்து நாட்டினால்
அன்றுதெய்வம் உம்முளே
அரிந்ததே சிவாயமே. 181

நட்டதா வரங்களும் நவின்ற
சாத்திரங்களும்
இட்டமானது ஓமகுண்டம்
இசைந்தநாலு வேதமும்
கட்டிவைத்த புத்தகம்
கடும்பிதற்று இதற்கெலாம்
பொட்டதாய் முடிந்ததே
பிரானையான் அறியவே.
182

வட்டமான கூட்டிலே
வளர்ந்தெழுந்த அம்புலி
சட்டசமீ பத்திலே சங்குசக்
கரங்களாய்
விட்டதுஅச்சு வாசலில்

கதவினால் அடைத்தபின்
முட்டையில் எழுந்தசிவன் 183
விட்டவாறது எங்ஙனே?
கோயில்பள்ளி ஏதடா?
குறித்துநின்றது ஏதடா?
வாயினால் தொழுதுநின்ற
மந்திரங்கள் ஏதடா?
ஞானமான பள்ளியில்
நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில்
காணலாம் இறையையே.
184

நல்லவெள்ளி ஆறதாய்
நயந்தசெம்பு நாலதாய்
கொல்லுநாகம் மூன்றதாய்
குலாவுசெம்பொனி
ரண்டதாய்

வில்லின்ஓசை ஒன்றுடன்
விளங்கஊத வல்லீரேல்
எல்லைஒத்த சோதியானை
எட்டுமாற்ற லாகுமே. 185

மனத்தகத்து அழுக்கறாத
மவுனஞான யோகிகள்;
வனத்தகத்து இருக்கினும்
மனத்தகத்து அழுக்கறார்;
மனத்தகத்து அழுக்கறுத்த
மவினஞான யோகிகள்
பிணத்தடத்து இருக்கினும்
பிறப்பறுத்து இருப்பரே! 186

உருவும்அல்ல ஒளியும்
அல்ல ஒன்றதாகி நின்றதே
மருவும்அல்ல கந்தம்அல்ல
மந்தநாடி உற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல

பேசும்ஆவி தானும்அல்ல
அரியதாக நின்றநேர்மை
யாவர்காண வல்லிரே. 187

ஓரெழுத்து உலகெலாம்
உதித்த அட்சரத்துளே
ஈரெழுத்து இயம்புகின்ற
இன்பமேது அறிகிலீர்
மூவெழுத்து மூவராய்
மூண்டெழுந்த மூர்த்தியை
நாலெழுத்து நாவிலே
நவின்றதே சிவாயமே. 188

ஆதிஅந்த மூலவிந்து
நாதம்ஐந்து பூதமாய்
ஆதிஅந்த மூலவிந்து
நாதம்ஐந் தெழுத்துமாய்
ஆதிஅந்த மூலவிந்து

நாதம்மேவி நின்றதும்
ஆதிஅந்த மூலவிந்து நாதமே 189
சிவாயமே.

அன்னம்இட்ட பேரெலாம்
அனேககோடி வாழவே
சொன்னமிட்ட பேரெலாம்
துரைத்தனங்கள் பண்ணலாம்
விண்ணம்இட்ட பேரேலாம்
வீழ்வர்வெந் நரகிலே
கன்னம்இட்ட பேரெலாம்
கடந்துநின்றல் திண்ணமே! 190

ஓதொணாமல் நின்றநீர்
உறக்கம்உணும் அற்றநீர்
சாதிபேதம் அற்றநீர்
சங்கையின்றி நின்ற நீர்
கோதிலாத அறிவிலே
குறிப்புணர்ந்து நின்றநீர்

ஏதும்இன்றி நின்றநீர் 191
இயங்குமாறு எங்ஙனே?
பிறந்தபொது கோவணம்
இலங்குநூல் குடுமியும்
பிறந்ததுடன் பிறந்ததோ,
பிறங்குநூலி உடங்கெலாம்
மறந்தநாலு வேதமும்
மனத்துளே உதித்ததோ?
நிலம்பிளந்து வான்இடிந்து
நின்றதுஎன்ன வல்லீரே? 192
துருத்தியுண்டு
கொல்லனுண்டு சொர்ணமான
சோதியுண்டு
திருத்தமாம்
மனத்தில்உன்னித் திகழஊத
வல்லீரேல்,
பெருத்ததூண் இலங்கியே

பிழம்பதாய் விரிந்திடும்
நிருத்தமான சோதியும்
நீயும்அல்லது இல்லையே. 193

வேடமிட்டு மின்துலக்கி
மிக்கதூப தீபமாய்
ஆடறுத்து கூறுபோட்ட
அவர்கள்போலும் பண்ணுறீர்
தேடிவத்த செம்பெலாம்
திரள்படப் பரப்பியே
போடுகின்ற புட்பபூசை
பூசைஎன்ன பூசையே? 194
முட்டுகண்ட தூமையின்
முளைத்தெழுந்த சீவனை
கட்டிக்கொண்டு நின்றிடம்
கடந்துநோக்க வல்லீரேல்
திட்டும்அற்று சுட்டும்அற்று

முடியில்நின்ற நாதனை
எட்டுத்திக்கும் கையினால் 195
இருந்தவீட தாகுமே.
அருக்கனோடு சோமனும்
அதுக்கும் அப்புறத்திலே
நெருக்கிஏறு தாரகை
நெருங்கிநின்ற நேர்மையை
உருக்கிஓர் எழுத்துமே
ஒப்பிலாத வெளியிலே
இருக்கவல்ல பேரலோ
இனிப்பிறப்பது இல்லையே. 196

அருக்கன் - சூரியன், சோமன்
- சந்திரன்

மூலவட்டம் மீதிலே
முளைத்தஅஞ்சு

எழுத்தின்மேல்
கோலவட்டம் மூன்றுமாய்
குலைந்தலைந்து நின்றநீர்
ஓலைவட்ட மன்றுளே
நவின்றஞானம் ஆகிலோ
ஏலவட்டம் ஆகியே
இருந்ததே சிவாயமே. 197

சுக்கிலத் திசையுளே
சுரோணிதத்தின் வாசலுள்
முத்துசரம் எட்டுளே
மூலாதார வறையிலே
அச்சமற்ற சவ்வுளே
அரிஅரன் அயனுமாய்
உச்சரிக்கும் மந்திரம்
உண்மையே சிவாயமே. 198

பூவும்நீரும் என்மனம்
பொருந்துகோயில் என்உளம்

ஆவியோடி லிங்கமாய்
அகண்டம்எங்கும் ஆகிலும்
மேவுகின்ற ஐவரும்
விளங்குதூப தீபமாய்
ஆடுகின்ற கூத்தனுக்கோர்
அந்திசந்தி இல்லையே. 199
உருக்கலந்த பின்னலோ
உன்னைநான் அறிந்தது
இருக்கில்என், மறைக்கில்என்
நினைந்திருந்த போதெலாம்
உருக்கலந்து நின்றபோது
நீயும்நானும் ஒன்றலோ?
திருக்கலந்து போதலோ
தெளிந்ததே சிவாயமே. 200
சிவாயம் அஞ்செழுத்திலே
தெளிந்துதேவ ராகலாம்
சிவாயம் அஞ்செழுத்திலே

தெளிந்துவானம் ஆளலாம்
சிவாயம் அஞ்செழுத்துளே
தெளிந்துகொண்ட
வான்பொருள்
சிவாயம் அஞ்செழுத்துளே
தெளிந்துகொள்ளும்
உண்மையே. 201

பொய்க்குடத்தில்
ஐந்தொதுங்கிப் போகம்வீசு
மாறுபோல்
இச்சடமும் இந்திரியமும்
நீருமேல் அலைந்ததே
அக்குடம் சலத்தைமொண்டு
அமர்ந்திருந்த வாறுபோல்
இச்சடம் சிவத்தைமொண்டு
உகந்தமர்ந்து இருப்பதே.
202

பட்டமும் கயிறுபோல்
பறக்கநின்ற சீவனைப்
பட்டறிவினாலே பார்த்துநீ
படுமுடிச்சு போடடா;
திட்டவும் படாதடா, சீவனை
விடாதடா
கட்டடாநீ சிக்கெனக்
களவறிந்த கள்வனை. 203

அல்லிறந்து பகலிறந்து
அகப்பிரமம் இறந்துபோய்
அண்டரண்ட மும்கடந்த
அனேகனேக ரூபமாய்ச்
சொல்லிறந்த மனமிறந்த
சுகசொரூப உண்மையைச்
சொல்லியாற என்னில்வேறு
துணைவரில்லை ஆனதே. 204

ஐயிரண்டு திங்களாய்

அடங்கிநின்ற தூமைதான்;
கையிரண்டு காலிரண்டு
கண்ணிரண்டும் ஆகியே
மெய்திரண்டு சத்தமாய்
விளங்கிரச கந்தமும்
துய்யகாயம் ஆனதும்
சொல்லுகின்ற தூமையே. 205
அங்கலிங்க பீடமும்
அசவைமூன்று எழுத்தினும்
சங்குசக் கரத்திலும் சகல
வானத்திலும்
பங்குகொண்ட யோகிகள்
பரமவாசல் அஞ்சினும்
சிங்கநாத ஓசையும்
சிவாயம்அல்ல தில்லையே.
206

அசவை - அசுபா மந்திரம்

அஞ்செழுத்தும்
மூன்றெழுத்தும்
என்றுரைக்கும் அன்பர்காள்
அஞ்செழுத்தும்
மூன்றெழுத்தும்
அல்லகாணும் அப்பொருள்;
அஞ்செழுத்தும் நெஞ்சழுத்து
அவ்வெழுத் தறிந்தபின்
அஞ்செழுத்தும்
அவ்வின்வண்ணம் ஆனதே 207
சிவாயமே.

ஆதரித்த மந்திரம்
அமைந்தஆக மங்களும்
மாதர்மக்கள் சுற்றமும்
மயக்கவந்த நித்திரை
ஏதுபுக் கொளித்ததோ,

எங்கும்ஆகி நின்றதோ?
சோதிபுக் கொளித்திடம்
சொல்லடா சுவாமியே. 208

அக்கரம் அனாதியோ,
ஆத்துமா அனாதியோ?
புக்கிருந்த பூதமும்
புலன்களும் அனாதியோ?
தக்கமிக்க நூல்களும்
சதாசிவம் அனாதியோ?
மிக்கவந்த யோகிகாள்,
விரைந்துரைக்க வேணுமே. 209

ஒன்பதான வாசல்தான்
ஒழியுநாள் இருக்கையில்
ஒன்பதாம் ராமராம
ராமஎன்னும் நாமமே
வன்மமான பேர்கள்வாக்கில்
வந்துநோய் அடைப்பதாம்

அன்பரான பேர்கள்வாக்கில்
ஆழ்ந்தமைந்து இருப்பதே. 210

அள்ளிநீரை இட்டதேது?
அங்கையில் குழைந்ததேது?
மெள்ளவே
முணமுணவென்று
விளம்புகின்ற மூடர்காள்
கள்ளவேடம் இட்டதேது
கண்ணைமூடி விட்டதேது?
மெள்ளவே குருக்களே,
விளம்பிடீர் விளம்பிடீர். 211

அன்னைகர்ப்பத் தூமையில்
அவதரித்த சுக்கிலம்
முன்னையே தரித்தும்
பனித்துளிபோலாகுமே;
உன்னிதொக் குளழலும்

தூமையுள்ளுளே அடங்கிடும்
பின்னையே பிறப்பதும்
தூமைகாணும் பித்தரே. 212

அழுக்கறத் தினங்குளித்து
அழுக்கறாத மாந்தரே,
அழுக்கிருந்தது எவ்விடம்,
அழகில்லாதது எவ்விடம்.
அழுக்கிருந்தது எவ்விடத்து
அழுக்கறுக்க வல்லீரேல்
அழுக்கிலாதது சோதியோடு
அணுகிவாழ லாகுமே. 213

அணுத்திரண்ட கண்டமாய்
அனைத்துபல்லி யோனியாய்
மனுப்பிறந்து ஓதிவைத்த
நூலிலே மயங்குறீர்
சனிப்பதுஏது; சாவதுஏது;

தாபரத்தின் ஊடுபோய்
நினைப்பதுஏது? நிற்பதுஏது; 214
நீர்நினைந்து பாருமே.

ஆதியாகி அண்டரண்டம்
அப்புறத்தும் அப்புறம்
சோதியாகி நின்றிலங்கு
சுருதிநாத சோமனை
போதியாமல் தம்முளே
பெற்றுணர்ந்த ஞானிகள்,
சாதிபேதம் என்பதொன்று
சற்றுமில்லை இல்லையே!
215

ஆக்கைமூப்பது இல்லையே
ஆதிகா ரணத்திலே
நாக்கைமூக்கையுள் மடித்து
நாதநாடி யூடுபோய்
ஏக்கறுத்தி ரெட்டையும்

இறுக்கழுத்த வல்லீரேல்
பார்க்கப்பார்க்கத்
திக்கெல்லாம் பரப்பிரம்மம் 216
ஆகுமே.
அஞ்சும்அஞ்சும்
அஞ்சும்அஞ்சும்
அல்லல்செய்து நிற்பதும்
அஞ்சும்அஞ்சும் அஞ்சுமே
அமர்ந்துளே இருப்பதும்
அஞ்சும்அஞ்சும் அஞ்சுமே
ஆதரிக்க வல்லீரேல்
அஞ்சும்அஞ்சும் உம்முளே
அமர்ந்ததே சிவாயமே. 217
அஞ்செழுத்தி னாதியாய்
அமர்ந்துநின்றது ஏதடா?
நெஞ்செழுத்தி
நின்றுகொண்டு நீசெபிப்பது

ஏதடா?
அஞ்செழுத்தின் வாளதால்
அறுப்பதாவது ஏதடா?
பிஞ்செழுத்தின் நேர்மைதான்
பிரித்துரைக்க வேண்டுமே. 218

உயிரிருந்தது எவ்விடம்?
உடம்பெடுப்பு தன்முனம்?
உயிரதாவது ஏதடா?
உடம்பதாவது ஏதடா?
உயிரையும் உடம்பையும்
ஒன்றுவிப்பது ஏதடா?
உயிரினால் உடம்பெடுத்த
உண்மைஞானி சொல்லடா. 219

சுழித்தவோர் எழுத்தையும்
சொன்முகத்து இருத்தியே
துன்ப்இன்ப முங்கடந்து
செல்லுமூல நாடிகள்

அழுத்தமான அக்கரம்
அங்கியுள் எழுப்பியே
ஆறுபங்க யம்கலந்து
அப்புறத் தலத்துளே. 220

உருத்தரிப்ப தற்குமுன்
உயிர்புகுந்த நாதமும்
கருத்தரிப்ப தற்குமுன் காயம்
என்ன சோணிதம்
அருள்தரிப்ப தற்குமுன்
அறிவுமூலா தாரமாம்
குறித்தறிந்து கொள்ளுவீர்
குணங்கெடும் குருக்களே. 221

எங்கும்உள்ள ஈசனார்
எம்முடல் புகுந்தபின்
பங்குகூறு போடுவார்,
பாடுசென்று அணுகிலார்
எங்கள்தெய்வம்

உங்கள்தெய்வம் என்றிரண்டு
பேதமோ?
உங்கள்பேதம் அன்றியே
உண்மைஇரண்டு
இல்லையே? 222

அரியுமாகி அயனுமாகி
அண்டமெங்கும் ஒன்றதாய்ப்
பெரியதாகி உலகுதன்னில்
நின்றபாதம் ஒன்றலோ
விரிவதென்று வேறுசெய்த
வேடமிட்ட மூடரே,
அறிவினோடு பாரும்இங்கும்
அங்கும் ஒன்றதே. 223

வெந்தநீறு மெய்க்கணிந்து
வேடமும் தரிக்கிறீர்
சிந்தையுள் நினைந்துமே
தினம்செபிக்கு மந்திரம்

முந்துமந்தி ரத்திலோ,
மூலமந்திரத்திலோ,
எந்தமந்தி ரத்திலோ
ஈசன்வந்து இயங்குமே? 224

அகாரகார ணத்திலே
அனேகனேக ரூபமாய்
உகாரகார ணத்திலே
உருத்தரித்து நின்றனன்
மகாரகார ணத்திலே
மயங்குகின்ற வையகம்
சிகாரகார ணத்திலே
தெளிந்ததே சிவாயமே. 225

அவ்வெழுத்தில் உவ்வுவந்து
அகாரமும் சனித்ததோ?
உவ்வெழுத்து
மவ்வெழுத்தும்

ஒன்றைஒன்றி நின்றதோ!
செவ்வைஒத்து நின்றலோ
சிவபதங்கள் சேரினும்
மிவ்வையொத்த ஞானிகாள், 226
விரித்துரைக்க வேணுமே.
மிவ்வை - நற்குணம்

ஆதியான அஞ்சிலும்
அனாதியான நாலிலும்
சோதியான மூன்றிலும்
சொரூபம்அற்ற ரெண்டிலும்
நீதியான தொன்றிலே
நிறைந்துநின்ற வத்துவை
ஆதியான தொன்றுமே
அற்றதஞ் செழுத்துமே. 227

வானிலாதது ஒன்றுமில்லை
வானுமில்லை வானிடில்

ஊனிலாதது ஒன்றுமில்லை
ஊனுமில்லை ஊனிடில்
நானிலாதது ஒன்றுமில்லை
நானுமில்லை நண்ணிடில்
தானிலாதது ஒன்றுமில்லை
தயங்கி ஆடுகின்றதே! 228

சுழித்ததோர் எழுத்தைஉன்னி
சொல்லுமுகத்து இருத்தியே
துன்ப்இன்ப முங்கடந்து
சொல்லும்நாடி யூடுபோய்
அழுத்தமான அக்கிரத்தின்
அங்கியை எழுப்பியே
ஆறுபங்க யம்கடந்து
அப்புறத்து வெளியிலே. 229
விழுத்தகண் குவித்தபோ
தடைந்துபோய் எழுத்தெலாம்
விளைந்துவிட்ட இந்திரசால

வீடதான வெளியிலே
அழுத்தினாலு மதிமயங்கி
அனுபவிக்கும் வேளையில்
அவனுமுண்டு நானுமில்லை
யாருமில்லை ஆனதே. 230

நல்லமஞ் சனங்கள்தேடி
நாடிநாடி ஓடுறீர்
நல்லமஞ் சனங்களுண்டு
நாதன்உண்டு நம்முளே
எல்லைமஞ் சனங்கள்தேடி
ஏகபூசை பண்ணினால்
தில்லைமேவும் சீவனும்
சிவபதத்துள் ஆடுமே.
231

உயிர்அகத்தில் நின்றிடும்
உடம்பெடுத்த தற்குமுன்
உயிர்அகாரம் ஆயிடும்

உடல்உகாரம் ஆயிடும்
உயிரையும் உடம்பையும்
ஒன்றுவிப்பது அச்சிவம்
உயிரினால் உடம்புதான் 232
எடுத்தவாறு உரைக்கினேன்.
அண்டம்ஏழும் உழலவே
அனந்தயோனி உழலவே
பண்டைமால், அயனுடன்
பரந்துநின்று உழலவே
எண்திசை கடந்துநின்ற
இருண்டசத்தி உழலவே
அண்டரண்டம் ஒன்றதாய்
ஆதிநட்டம் ஆடுமே. 233

உருவநீர் உறுப்புகொண்டு
உருத்தரித்து வைத்திடும்
பெரியபாதை பேசுமோ

பிசாசைஒத்த மூடரே,
கரியமாலம் அயனுமாக
காணொணாத கடவுளை
உரிமையாக உம்முளே
உணர்ந்துணர்ந்து 234
கொள்ளுமே.

பண்ணிவைத்த கல்லையும்
பழம்பொருள் அதென்றுநீர்
எண்ணமுற்றும் என்னபேர்
உரைக்கிறீர்கள் ஏழைகாள்
பண்ணவும் படைக்கவும்
படைத்துவைத்து அளிக்கவும்
ஒண்ணுமாகி உலகளித்த
ஒன்றைநெஞ்சில் உண்ணுமே. 235

நாலதான போனியும்
நவின்றவிந்தும் ஒன்றதாய்

ஆலதான வித்துளே
அமர்ந்தொடுங்கு மாறுபோல்
சூலதான உற்பனம்
சொல்வதான மந்திரம்
மேலதான ஞானிகாள் 236
விரித்துரைக்க வேணுமே.

அருவமாய் இருந்தபோது
அன்னைஅங்கு அறிந்திலை
உருவமாய் இருந்தபோது
உன்னைநான் அறிந்தனன்
குருவினான்
தெளிந்துகொண்டு கோதிலாத
ஞானமாம்
பருவமான போதலோ
பரப்பிரமம் ஆனதே. 237

பிறப்பதும் இறப்பதும்
பிறந்திடாது இருப்பதும்

மறப்பதும் நினைப்பதும்
மறைந்ததைத் தெளிந்ததும்
துறப்பதும் கொடுப்பதும்
சுகித்துவாரி உண்பதும்
பிறப்பதும் இறப்பதும்
பிறந்தவீடு அடங்குமே. 238

கண்ணிலே இருப்பனே
கருங்கடல் கடைந்தமால்
விண்ணிலே இருப்பனே
மேவிஅங்கு நிற்பனே
தன்னுளே இருப்பனே
தராதலம் படைத்தவன்
என்னுளே இருப்பனே
எங்குமாகி நிற்பனே. 239
ஆடுநாடு தேடினும்
ஆனைசேனை தேடினும்

கோடிவாசி தேடினும்
குறுக்கேவந்து நிற்குமோ?
ஓடிஇட்ட பிச்சையும்
உகந்துசெய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல் 240
தர்மம்வந்து நிற்குமே.

எள்இரும்பு கம்பளி
இடும்பருத்தி வெண்கலம்
அள்ளிஉண்ட நாதனுக்கோர்
ஆடைமாடை வத்திரம்
உள்ளிருக்கும் வேதியர்க்கு
உற்றதானம் ஈதிரால்
மெள்ளவந்து நோய்
அனைத்தும் மீண்டிடும் 241
சிவாயமே.

ஊரிலுள்ள மனிதர்காள்
ஒருமனதாய்க் கூடியே

தேரிலே வடத்தைவிட்டு
செம்பைவைத்து இழுக்கிறீர்
ஆரினாலும் அறியொணாத
ஆதிசித்த நாதரை
போரிலான மனிதர்பண்ணும்
புரளிபாரும் பாருமே. 242

மருள்புகுந்த சிந்தையால்
மயங்குகின்ற மாந்தரே
குருக்கொடுத்த மந்திரம்
கொண்டுநீந்த வல்லீரேல்
குருக்கொடுத்த தொண்டரும்
முகனொடித்த பிள்ளையும்
பருத்திபட்ட பன்னிரண்டு
பாடுதான் படுவரே. 243

அன்னைகர்ப்ப
அறைஅதற்குள்

அங்கியின்பிர காசமாய்
அந்தறைக்குள் வந்திருந்து
அரியவந்து ரூபமாய்
தன்னைஒத்து நின்றபோது
தடையறுத்து வெளியதாய்
தங்கநற் பெருமைதந்து 244
தலைவனாய் வளர்ந்ததே.

உன்னையற்ப நேரமும்
மறந்திருக்க லாகுமோ
உள்ளமீது உறைந்தெனை
மறைப்பிலாத சோதியைப்
பொன்னவென்ற பேரொளிப்
பொருவில்லாத ஈசனே
பொன்னடிப் பிறப்பில்லாமை
என்றுநல்க வேணுமே. 245

பிடித்ததண்டும் உம்மதோ

பிரமமான பித்தர்காள்
தடித்தகோலம் அத்தைவிட்டு
சாதிபேதங் கொண்மினோ,
வடித்திருந்த தோர்சிவத்தை
வாய்மைகூற வல்லீரேல்
திடுக்கமுற்ற ஈசனைச் 246
சென்றுகூட லாகுமே.
சத்திநீ தயவுநீ தயங்குசங்கின்
ஓசைநீ
சித்திநீ சிவனும்நீ சிவாயமாம்
எழுத்துநீ
முத்திநீ முதலும்நீ மூவரான
தேவர்நீ
அத்திபூரம் உம்முளே
அறிந்துணர்ந்து கொள்ளுமே. 247
சட்டையிட்டு மணிதுலங்கும்
சாத்திரச் சழக்கரே

பொத்தகத்தை
மெத்தவைத்துப்
போதமோதும் பொய்யரே
நிட்டைஏது ஞானமேது?
நீரிருந்த அட்சரம்
பட்டைஏது? சொல்லீரே
பாதகக் கபடரே? 248

உண்மையான சுக்கிலம்
உபாயமாய் இருந்ததும்
வெண்மையாகி நீரிலே
விரைந்துநீர தானதும்
தண்மையான காயமே
தரித்துஉருவம் ஆனதும்
தெண்மையான ஞானிகாள்
தெளிந்துரைக்க வேணுமே. 249

வஞ்சகப் பிறவியை
மனத்துளே விரும்பியே

அஞ்செழுத்தின் உண்மையை
அறிகிலாத மாந்தர்காள்
வஞ்சகப் பிறவியை
வதைத்திடவும் வல்லீரேல்
அஞ்செழுத்தின் உண்மையை
அறிந்துகொள்ள லாகுமே. 250

காயிலாத சோலையில்
கனியுகந்த வண்டுகள்
ஈயிலாத தேனையுண்டு
இராப்பகல் உறங்குறீர்
பாயிலாத கப்பலேறி
அக்கரைப் படுமுனே
வாயினால் உரைப்பதாகு
மோமவுன ஞானமே. 251

பேய்கள்பேய்கள் என்கிறீர்
பிதற்குகின்ற பேயர்காள்,
பேய்கள்பூசை கொள்ளுமோ

பிடாரிபூசை கொள்ளுமோ
ஆதிபூசை கொள்ளுமோ
அனாதி பூசை கொள்ளுமோ
காயமான பேயலோ
கணக்கறிந்து கொண்டதே. 252

மூலமண்ட லத்திலே
முச்சதுரம் ஆதியாய்
நாலுவாசல் எம்பிரான்
நடுஉதித்த மந்திரம்
கோலிஎட்டு இதழுமாய்
குளிர்ந்தலர்ந்த தீட்டமாய்
மேலும்வேறு காண்கிலேன்
விளைந்ததே சிவாயமே. 253

ஆதிநாடி நாடிஓடிக்
காலைமாலை நீரிலே
சோதிமூல மானநாடி

சொல்லிறந்த தூவெளி
ஆதிகூடி நெற்பறித்தது
அகாரமாதி ஆகமம்
பேதபேதம் ஆகியே
பிறந்துடல் இறந்ததே. 254

பாங்கினோடு
இருந்துகொண்டு பரமன்அஞ்
செழுத்துளே
ஓங்கிநாடி மேல்இருந்து
உச்சரித்த மந்திரம்
மூங்கில்வெட்டி நார்உரித்து
முச்சில்செய் விதத்தினில்
ஆய்ந்தநூலில் தோன்றுமே
அரிந்துணர்ந்து கொள்ளுமே. 255

புண்டரீக மத்தியில்
உதித்தெழுந்த சோதியை

மண்டலங்கள் மூன்றினோடு
மன்னுகின்ற மாயனை
அண்டரண்டம் ஊடறுத்து
அறிந்துணர வல்லீரேல்
கண்டகோயில்
தெய்வம்என்று கையெடுப்ப 256
தில்லையே.
புண்டரீகம் - தாமரை

அம்பலங்கள் சந்தியில்
ஆடுகின்ற வம்பனே
அன்பனுக்குள் அன்பனாய்
நிற்பதுஆதி வீரனே
அன்பருக்குள் அன்பராய்
நின்றஆதி நாதனே
உம்பருக்கு உண்மையாய்

நின்றஉண்மை உண்மையே. 257
அண்ணலாவது ஏதடா?
அறிந்துரைத்த மந்திரம்
தண்ணலாக வந்தவன்
சகலபுராணம் கற்றவன்
கண்ணனாக வந்ததன்
காரணத் துதித்தவன்
ஒண்ணதாவது ஏதடா?
உண்மையான மந்திரம்? 258

உள்ளதோ புறம்பதோ
உயிர்ஒடுங்கி நின்றிடம்
மெள்ளவந்து கிட்டிநீர்
வினவவேணும் என்கிறீர்?
உள்ளதும் புறம்பதும்
ஒத்தபோது நாதமாம்
கள்ளவாச லைத்திறந்து
காணவேணும் மந்திரம். 259

ஆரலைந்து பூதமாய்
அளவிடாத யோனியும்
பாரமான தேவரும்
பழுதிலாத பாசமும்
ஒரொணாத அண்டமும்
உலோகலோக லோகமும்
சேரவெந்து போயிருந்த
தேகம்ஏது செப்புமே?
260

என்னகத்துள் என்னைநான்
எங்குநாடி ஓடினேன்?
என்னகத்துள் என்னைநான்
அறிந்திலாத தாகையால்
என்னகத்துள் என்னைநான்
அறிந்துமே தெரிந்தபின்
என்னகத்துள் என்னைஅன்றி
யாதுமொன்று மில்லையே. 261

விண்ணினின்று
மின்னெழுந்து
மின்னொடுங்கு மாறுபோல்
என்னுள்நின்றும்
எண்ணும்ஈசன் என்னகத்திருக்
கையால்
கண்ணினின்று
கண்ணில்தோன்றும் கண்ணிறி
விலாமையால்
என்னுள்நின்ற என்னையும் 262
யானறிந்தது இல்லையே.
அடக்கினும் அடக்கொணாத
அம்பலத்தின் ஊடுபோய்
அடக்கினும் அடக்கொணாத
அன்பிருக்கும் என்னுளே
கிடக்கினும் இருக்கினும்
கிலேசம்வந்து இருக்கினும்

நடக்கினும் இடைவிடாத
நாதசங் கொலிக்குமே. 263

மட்டுலாவு தண்துழாய்
அலங்கலாய் புனற்கழல்
வீட்டுவீழில் தாகபோக
விண்ணில்மண்ணில்
வெளியினும்
எட்டினோடு இரண்டினும்
இதத்தினால் மனந்தனைக்
கட்டிவீடி லாதுவைத்த
காதலின்பம் ஆகுமே. 264

ஏகமுத்தி மூன்றுமுத்தி
நாலுமுத்தி நன்மைசேர்
போகமுற்றி புண்ணியத்தில்
முத்திஅன்றி முத்தியாய்
நாகமுற்றி சயனமாய்
நலங்கடல் கடந்ததீ

யாகமுற்றி ஆகிநின்ற
தென்கொலாதி தேவனே. 265

மூன்றுமுப்பது ஆறினோடு
மூன்றுமூன்று மாயமாய்
மூன்றுமுத்தி ஆகிமூன்று
மூன்றுமூன்று மூன்றுமாய்த்
தோன்றுசோதி மூன்றுதாய்
துலக்கமில் விளக்கதாய்
ஏன்றெனாவின் உள்புகுந்த 266
தென்கோலோ நம்ஈசனே.

ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்
அல்லவற்றுள் ஆயுமாய்
ஐந்துமூன்றும் ஒன்றுமாகி
நின்றஆதி தேவனே
ஐந்தும்ஐந்தும் ஐந்துமாய்
அமைந்தனைத்து நின்றநீ

ஐந்தும்ஐந்தும் ஆயநின்னை 267
யாவர்காண வல்லரே.

ஆறும்ஆறும் ஆறுமாய்
ஓர்ஐந்தும்ஐந்தும் ஐந்துமாய்
ஏறுசீர் இரண்டுமூன்றும்
ஏழும்ஆறும் எட்டுமாய்
வேறுவேறு ஞானமாகி
மெய்யினோடு பொய்யுமாய்
ஊறும்ஓசை யாய்அமர்ந்த
மாயமாம் மாயனே. 268

எட்டும்எட்டும் எட்டுமாய்
ஓர்ஏழும் ஏழுமாய்
எட்டும் ஒன்றும் மூன்றுமாகி
நின்றஆதி தேவனே
எட்டுமாய பாதமோடு
இறைஞ்சி நின்றவண்ணமே

எட்டெழுத்தும் ஓதுவார்கள் 269
அல்லல்நீங்கி நிற்பரே.
பத்தினோடு பத்துமாய்
ஓர்ஏழினோடு ஒன்பதாய்
பத்துநாற் திசைக்குள்நின்ற
நாடுபெற்ற நன்மையால்
பத்துமாய கொத்தமோடும்
அத்தலமிக் காதிமால்
பத்தர்கட் கலாதுமுத்தி
முத்திமுத்தி யாகுமே.

270

வாசியாகி நேசம்ஒன்றி
வந்தெதிர்த்த தென்னுக
நேசமாக நாளுலாவ
நன்மைசேர் பாவங்களில்
வீசிமேல் நிமிர்ந்ததோளி
யில்லையாக்கி னாய்கழல்

ஆசையாய் மறக்கலாது 271
அமரர்ஆகல் ஆகுமே.

எளியதாக காயமீதில்
எம்பிரான் இருப்பிடம்
அளிவுறாது நின்றதே
அகாரமும் உகாரமும்
கொளுகையான சோதியும்
குலாவிநின்றது அவ்விடம்
வெளியதாகும் ஒன்றிலே
விளைந்ததே சிவாயமே. 272

அஞ்செழுத்தும்
மூன்றெழுத்தும்
என்றுரைக்கும் அன்பர்காள்
அஞ்செழுத்தும்
மூன்றெழுத்தும்
அல்லகாணும் அப்பொருள்
அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி

அவ்வெழுத்தை அறிந்தபின்
அஞ்செழுத்தும்
மூன்றெழுத்தும் அவ்வுமாம்
சிவாயமே. 273

பொய்யுரைக்க போகமென்று
பொய்யருக் கிருக்கையால்
மெய்யுரைக்க
வேண்டுதில்லை
மெய்யர்மெய்க்
கிலாமையால்
வையகத்தில்
உண்மைதன்னை வாய்திறக்க
அஞ்சினேன்
நையவைத்தது என்கொலோ
நமசிவாய நாதனே! 274

ஒன்றைஒன்று கொன்றுகூட
உணவுசெய்து இருக்கினும்

மன்றினூடு பொய்களவு
மாறுவேறு செய்யினும்
பன்றிதேடும் ஈசனைப்
பரிந்துகூட வல்லீரேல்
அன்றுதேவர் உம்முளே
அறிந்துணர்ந்து கொள்ளுமே. 275
மன்று - கடை

மச்சகத் துளேஇவர்ந்து
மாயைபேசும் வாயுவை
அச்சகத்துளே இருந்து
அறிவுணர்த்திக் கொள்விரேல்
இச்சைஅற்ற எம்பிரான்
எங்கும்ஆகி நிற்பனே
அச்சகத் துளேயிருந்து
அறுவுணர்த்திக்
கொண்டபின். 276

வயலிலே முலைத்தநெல்
களையதான வாறுபோல்
உலகினோரும்
உண்மைகூறில் உய்யுமாறது
எங்ஙனே
விரகிலே முளைத்தெழுந்த
மெய்யலாது பொய்யதாய்
நரகிலே பிறந்திருந்து
நாடுபட்ட பாடதே. 277
விரகு - விரகதாபம்

ஆடுகின்ற எம்பிரானை
அங்குமிங்கும் என்றுநீர்
தேடுகின்ற பாவிகாள்,
தெளிந்தஒன்றை ஓர்கிலீர்;
காடுநாடு வீடுவீண்
கலந்துநின்ற கள்வனை

நாடிஓடி உம்முளே 278
நயந்துணர்ந்து பாருமே.
ஆடுகின்ற அண்டர்கூடும்
அப்புறம திப்புறம்
தேடுநாலு வேதமும்
தேவரான மூவரும்
நீடுவாழி பூதமும் நின்பதோர்
நிலைகளும்
ஆடுவாழின் ஒழியலா
தனைத்துமில்லை
இல்லையே.
279

ஆவதும் பரத்துளே
அழிவதும் பரத்துளே
போவதும் பரத்துளே
புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே

திசைகளும் பரத்துளே
யாவரும் பரத்துளே யானும் 280
அப்பரத்துளே.

ஏழுபார் எழுகடல்
இடங்கள்எட்டு வெற்புடன்
சூழுவான் கிரிகடந்து
சொல்லும் ஏழுலகமும்
ஆழிமால் விசும்புகொள்
பிரமாண்டரண்ட அண்டமும்
ஊழியான் ஒளிக்குளே
உதித்துடன் ஒடுங்குமே. 281

கயத்துநீர் இறைக்குறீர்
கைகள்சோர்ந்து நிற்பதேன்?
மனத்துள்ஈரம் ஒன்றிலாத
மதிஇலாத மாந்தர்காள்;
மனத்துள்ஈரம் கொண்டுநீர்
அழுக்கறுக்க வல்லீரேல்

நினைத்திருந்த சோதியும்
நீயும்நானும் ஒன்றலோ? 282

நீரிலே பிறந்திருந்து
நீர்சடங்கு செய்கிறீர்
ஆரைஉன்னி நீரெலாம்
அவத்திலே இறைக்கிறீர்
வேரைஉன்னி வித்தைஉன்னி
வித்திலே முளைத்தெழும்
சீரைஉன்ன வல்லீரேல்
சிவபதம் அடைவிரே. 283

பத்தொடொத்த வாசலில்
பரந்துமூல வக்கரம்
முத்திசித்தி தொந்தமென்று
இயங்குகின்ற மூலமே
மத்தசித்த ஐம்புலன்
மாகரமான கூத்தையே
அத்தியூரர் தம்முளே 284

அமைந்ததே சிவாயமே.

அணுவினோடும் அண்டமாய்
அளவிடாத சோதியைக்
குணமதாகி உம்முளே
குறித்திருக்கில் முத்தியாம்
முணமுணென்று உம்முளே
விரலைஒன்றி மீளவும்
தினந்தினம் மயக்குவீர்
செம்புபூசை பண்ணியே. 285

மூலமான அக்கரம்
முகப்பதற்கு முன்னெலாம்
மூடமாக மூடுகின்ற மூடமேது
*மூடரே
காலனான அஞ்சுபூதம்
அஞ்சிலே ஒடுங்கினால்
ஆலயோடு கூடுமோ
அனாதியோடு கூடுமோ? 286

முச்சதுர மூலமாகி
முடிவுமாகி ஏகமாய்
அச்சதுரம் ஆகியே
அடங்கியோர் எழுத்துமாய்
மெய்ச்சதுர மெய்யுளே
விளங்குஞான தீபமாய்
உச்சரிக்கும் மந்திரத்தின்
உண்மையே சிவாயமே. 287

வண்டுலங்கள் போலும்நீர்
மனத்துமாசு அறுக்கிலீர்
குண்டலங்கள் போலுநீர்
குளத்திலே முழுகுறீர்
பண்டும் உங்கள் நான்முகன்
பறந்துதேடி காண்கிலான்,
கண்டிருக்கும் உம்முளே
கலந்திருப்பர் காணுமே. 288

நின்றதன்று இருந்ததன்று
நேரிதன்று கூறிதன்று
பந்தமன்று வீடுமன்று
பாவகங்கள் அற்றது.
கெந்தமன்று கேள்வியன்று
கேடிலாத வானிலே
அந்தமின்றி நின்றதொன்றை 289
எங்ஙனே உரைப்பதே.

பொருந்துநீரும் உம்முளே
புகுந்துநின்ற காரணம்
எருதிரண்டு கன்றைஈன்ற
ஏகமொன்றை ஓர்கிலிர்
அருகிருந்து சாவுகின்ற
ஆவையும் அறிந்திலீர்
குருவிருந்து உலாவுகின்ற
கோலம்என்ன கோலமே? 290

அம்பரத்துள் ஆடுகின்ற

அஞ்செழுத்து நீயலோ?
சிம்புகளாய்ப் பரந்துநின்ற
சிற்பரமும் நீயலோ?
எம்பிரானும் எவ்வுயிர்க்கும்
ஏகபோகம் ஆதலால்
எம்பிரானும் நானுமாய்
இருந்ததே சிவாயமே. 291

ஈரொளிய திங்களே
இயங்கிநின்றது தற்பரம்
ஏரொளீய திங்களே அஃது
யாவரும் அறிகிலீர்
காரொளிப் படலமும்
கடந்துபோன தற்பரம்
தாரொளிப் பெரும்பதம்
ஏகநாத பாதமே. 292

கொள்ளொணாது

மெல்லொணாது கோதாறக்
குதட்டடா
தள்ளொணாது
அணுகொணாது ஆகலான்
மனத்துளே
தெள்ளொணாது
தெளியொணாது சிற்பரத்தின்
உட்பயன்
விள்ளொணாது
பொருளைநான் 293
விளம்புமாறது எங்ஙனே?
வாக்கினால் மனத்தினால்
மதித்தகார ணத்தினால்
நோக்கொணாத
நோக்கையுன்னி
நோக்கையாவர் நோக்குவார்
நோக்கொணாத நோக்குவந்து

நோக்கநோக்க நோக்கிடில்
நோக்கொணாத நோக்குவந்து 294
நோக்கைஎங்கண் நோக்குமே.

உள்ளினும் புறம்பினும்
உலகமெங்கணும் பரந்து
எள்ளில்எண்ணெய்
போலநின்று இயங்குகின்ற
எம்பிரான்
மெள்ளவந்து என்னுட்புகுந்து
மெய்த்தவம் புரிந்தபின்
வள்ளலென்ன வள்ளலுக்கு
வண்ணமென்ன வண்ணமே? 295

வேதமொன்று கண்டிலேன்
வெம்பிறப்பு இலாமையால்
போதம்நின்ற வடிவதாய்ப்
புவனமெங்கும் ஆயினாய்,
சோதியுள் ஒளியுமாய்த்

துரியமோடு அதீதமாய்
ஆதிமூலம் ஆதியாய்
அமைந்ததே சிவாயமே.
296

சாண்இரு மடங்கினால்
சரிந்தகொண்டை தன்னுளே
பேணிஅப் பதிக்குளே
பிறந்திறந்து உழலுவீர்,
தோணியான ஐவரைத்
துறந்தறுக்க வல்லீரேல்
காணிகண்டு கோடியாய்க்
கலந்ததே சிவாயமே. 297
அஞ்சுகோடி மந்திரம்
அஞ்சுளே அடங்கினால்
நெஞ்சுகூற உம்முளே
நினைப்பதோர் எழுத்துளே
அஞ்சுநாலு மூன்றதாகி

உம்முளே அடங்கினால்
அஞ்சும்ஓர் எழுத்ததாய்
அமைந்ததே சிவாயமே. 298

அக்கரந்த அக்கரத்தில்
உட்கரந்த அக்கரம்
சக்கரத்து சிவ்வைருண்டு
சம்புளத் திருந்ததும்
எள்கரந்த எண்ணெய்போல்
எவ்வெழுத்தும் எம்பிரான்
உள்கரந்து நின்றநேர்மை
யாவர்காண வல்லரே. 299

ஆகமத்தின் உட்பொருள்
அகண்டமூலம் ஆதலால்
தாகபோக மின்றியே
தரித்ததற் பரமும்நீ
ஏகபாதம் வைத்தனை
உணர்த்தும் அஞ்செழுத்துளே

ஏகபோகம் ஆகியே
இருந்ததே சிவாயமே. 300

மூலவாசல் மீதுளேஓர்
முச்சரம் ஆகியே
நாலுவாசல் எண்விரல்
நடுஉதித்த மந்திரம்
கோலம்ஒன்றும் அஞ்சுமாகும்
இங்கலைந்து நின்றநீ
வேறுவேறு கண்டிலேன் 301
விளைந்ததே சிவாயமே.

சுக்கிலத் தடியுளே
சுழித்ததோர் எழுத்துளே
அக்கரத் தடியுளே
அமர்ந்தஆதி சோதிநீ
உக்கரத் தடியுளே உணர்ந்த
அஞ்செழுத்துளே
அக்கரம் அதாகியே

அமர்ந்ததே சிவாயமே. 302
குண்டலத்து ளேயுளே
அறுத்தகத்து நாயகன்
கண்டவந்த மண்டலம்
கருத்தழித்த கூத்தனை
விண்டலர்ந்த சந்திரன்
விளங்குகின்ற
மெய்ப்பொருள்
கண்டுகொண்ட மண்டலம்
சிவாயமல்லது இல்லையே. 303
சுற்றும்ஐந்து கூடமொன்று
சொல்லிறந்த தோர்வெளி
சத்தியும் சிவனுமாக
நின்றதன்மை ஓர்கிலீர்
சத்தியாவு தும்முடல்,
தயங்குசீவ னுட்சிவம்
பித்தர்காள் அறிந்திலீர்

பிரான்இருந்த கோலமே. 304
மூலம்என்ற மந்திரம்
முளைத்த அஞ்செழுத்துளே
நாலுவேதம் நாவுளே
நவின்றஞான மெய்யுளே
ஆலம்உண்ட கண்டனும்
அரிஅயனும் ஆதலால்
ஓலம்என்ற மந்திரம்
சிவாயமல்லது இல்லையே. 305

தத்துவங்கள் என்றுநீர்
தமைக்கடிந்து போவீர்காள்
தத்துவம் சிவமதாகில்
தற்பரமும் நீரல்லோ?
முத்திசீவன் நாதமே
மூலபாதம் வைத்தப்பின்
அத்தனாரும் உம்முளே

அறிந்துணர்ந்து கொள்ளுமே. 306

மூன்றுபத்து மூன்றையும்
மூன்றுசொன்ன மூலனே
தோன்றுசேர ஞானிகாள்
துய்யபாதம் என்தலை
என்றுவைத்த வைத்தபின்
இயல்பும் அஞ்செழுத்தையும்
தோன்றஓத வல்லீரேல்
துய்யசோதி காணுமே.
307

உம்பர் வானகத்தினும்
உலகபாரம் ஏழினும்
நம்பர்நாடு தன்னிலும்
நாவலென்ற தீவினும்
செம்பொன் மாடம்
மல்குதில்லை அம்பலத்துள்
ஆடுவான்

எம்பிரான் அலாதுதெய்வம் 308
இல்லைஇல்லை இல்லையே.

பூவலாய் ஐந்துமாய்
புனலில்நின்ற நான்குமாய்
தீயிலாய மூன்றுமாய்ச்
சிறந்தகால் இரண்டுமாய்
வேயிலாய தொன்றுமாய்
வேறுவேறு தன்மையாய்
நீயலாமல் நின்றநேர்மை
யாவர்காண வல்லரே? 309

அந்தரத்தில் ஒன்றுமாய்
அசைவுகால் இரண்டுமாய்
செந்தழலில் மூன்றுமாய்ச்
சிறந்தஅப்பு நான்குமாய்
ஐந்துபாரில் ஐந்துமாய்
அமர்ந்திருந்த நாதனைச்
சிந்தையில் தெளிந்தமாயை

யாவர்காண வல்லரே. 310
மனவிகாரம் அற்றுநீர்
மதித்திருக்க வல்லீரேல்
நினைவிலாத மணிவிளக்கு
நித்தமாகி நின்றிடும்;
அனைவர் ஓதும் வேதமும்
அகம்பிதற்ற வேணுமேல்
கனவுகண்டது உண்மைநீர்
தெளிந்ததே சிவாயமே. 311
இட்டகுண்டம் ஏதடா?
இருக்கு வேதம் ஏதடா?
சுட்டமண் கலத்திலே
சுற்றுநூல்கள் ஏதடா?
முட்டிநின்ற தூணிலே
முளைத்தெழுந்த சோதியைப்
பற்றிநின்றது ஏதடா பட்டநாத
பட்டரே. 312

நீரிலே முளைத்தெழுந்த
தாமரையின் ஓரிலை
நீரினோடு கூடிநின்றும்
நீரிலாத வாறுபோல்
பாரிலே முளைத்தெழுந்த
பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடிநின்ற
பண்புகண்டு இருப்பீரே. 313
உறக்கிலென், விழிக்கிலென்,
உணர்வுசென்று ஒடுங்கிலென்
சிறந்த ஐம்புலன்களும்
திசைத்திசைகள் ஒன்றிலென்?
புறமும்உள்ளும் எங்ஙனம்
பொருந்திருந்த தேகமாய்
நிறைந்திருந்த ஞானிகாள்
நினைப்பது ஏதும்
இல்லையே.

314

ஓதுவார்கள் ஓதுகின்ற
ஓர்எழுத்தும் ஒன்றதே
வேதம் என்ற தேகமாய்
விளம்புகின்றது அன்றிது,
நாதம்ஒன்று நான்முகன்
மாலும்நானும் ஒன்றதே!
ஏதுமின்றி நின்றதொன்றை
யான்உணர்ந்த நேர்மையே 315
பொங்கியே தரித்தஅச்சுப்
புண்டரீக வெளியிலே
தங்கியே தரித்தபோது
தாதுமா துளையதாம்
அங்கியுள் சரித்தபோது
வடிவுகள் ஒளியுமாய்க்
கொம்புமேல் வடிவுகொண்டு
குருஇருந்த கோலமே. 316

மண்ணுளோரும்
விண்ணுளோரும் வந்தவாறது
எங்கெனில்
மண்ணினோடு சோதிபோல்
கலந்தநாத விந்துவும்
அண்ணலோடு சத்தியும்
அஞ்சுபஞ்சு பூதமும்
மண்ணினோடு கொடுத்தழிப்
பாரொரோடேழும் இன்றுமே. 317

ஒடுக்குகின்ற சோதியும்
உந்திநின்ற ஒருவனும்
நடுத்தலத்தில் ஒருவனும்
நடந்துகாலில் ஏறியே
விடுத்துநின்ற இருவரோடு
மெய்யினோடு பொய்யுமாய்
அடுத்துநின்ற அறிமினோ
அனாதிநின்ற ஆதியே. 318

உதித்தமந் திரத்தினும்
ஒடுங்கும் அக்கரத்தினும்
மதித்தமண் டலத்தினும்
மறைந்துநின்ற சோதிநீ,
மதித்தமண் டலத்துளே
மரித்துநீ இருந்தபின்
சிரித்தமண் டலத்துளே
சிறந்ததே சிவாயமே. 319

திருத்திவைத்த சற்குருவைச்
சீர்பெற வணங்கிலீர்
குருக்கொடுக்கும் பித்தரே
கொண்டுநீந்த வல்லீரோ?
குருக்கொடுக்கும் பித்தரும்
குருக்கொள்வந்த சீடனும்
பருத்திபட்ட பாடுதான்
பன்னிரண்டும் பட்டதே. 320

விழித்தகண் துதிக்கவும்

விந்துநாத ஓசையும்,
மேருவும் கடந்தஅண்ட
கோளமும் கடந்துபோய்
எழுத்தெலாம் அழிந்துவிட்ட
இந்திரசால வெளியிலே
யானும்நீயு மேகலந்த
தென்னதன்மை ஈசனே. 321

ஓம்நமோ என்றுமுளே
பாவையென்று அறிந்தபின்,
பானுடல் கருத்துளே
பாவையென்று அறிந்தபின்,
நானும்நீயும் உண்டடா
நலங்குலம் அதுஉண்டடா,
ஊனும்ஊனும் ஒன்றுமே
உணர்ந்திடாய் உனக்குளே. 322

ஐம்புலனை வென்றவர்க்கு
அன்னதானம் ஈவதால்

நன்புலன்க ளாகிநின்ற
நாதருக்கது ஏறுமோ
ஐம்புலனை வென்றிடாது
அவத்துமே உழன்றிடும்
வம்பருக்கும் ஈவதும்
கொடுப்பதும் அவத்தமே. 323

ஆணியான ஐம்புலன்கள்
அவையும்மொக்குகள்
ஒக்குமோ?
யோனியில் பிறந்திருந்த
துன்பமிக்கு மொக்குமோ?
வீணர்காள் பிதற்றுவீர்
மெய்மையே உணர்திரேல்
ஊண்உறக்க போகமும்
உமக்கெனக்கும் ஒக்குமே.
324

ஓடுகின்ற ஐம்புலன்

ஒடுங்கஅஞ் செழுத்துளே
நாடுகின்ற நான்மறை
நவிலுகின்ற ஞானிகாள்
கூடுகின்ற பண்டித
குணங்கள்மூன்று எழுத்துளே
ஆடுகின்ற பாவையாய்
அமைந்ததே சிவாயமே. 325

புவனசக்க ரத்துளே பூதநாத
வெளியிலே,
பொங்குதீப அங்கியுள்
பொதிந்தெழுந்த வாயுவைத்
தவனசோமர் இருவரும்
தாம்இயங்கும் வாசலில்
தண்டுமாறி ஏறிநின்ற
சரசமான வெளியிலே. 326

மவுனஅஞ் செழுத்திலே
வாசிஏறி மெள்ளவே

வானளாய் நிறைந்தசோதி
மண்டலம் புகுந்தபின்
அவனும்நானும் மெய்கலந்து
அனுபவித்த அளவிலே
அவனுமுண்டு நானுமில்லை
யாருமில்லை யானதே. 327

வாளுறையில் வாளடக்கம்
வாயுறையில் வாய்வடக்கம்
ஆளுறையில் ஆளடக்கம்
அருமைஎன்ன வித்தைகாண்!
தாளுறையில் தாளடக்கம்
தன்மையான தன்மையும்
நாளுறையில் நாளடக்கம்
நானும் நீயும் கண்டதே. 328

வழுத்திடான் அழித்திடான்
மாயரூபம் ஆகிடான்
கழன்றிடான் வெகுண்டிடான்

காலகால காலமும்
துவண்டிடான் அசைந்திடான்
தூயதூபம் ஆகிடான்
சுவன்றிடான் உரைத்திடான்
சூட்சசூட்ச சூட்சமே. 329

ஆகிகூவென் றேஉரைத்த
அட்சரத்தின் ஆனந்தம்
யோகியோகி என்பர்கோடி
உற்றறிந்து கண்டிடார்
பூகமாய் மனக்குரங்கு
பொங்கும்மங்கும் இங்குமாய்
ஏகம்ஏக மாகவே
இருப்பர்கோடி கோடியே. 330

கோடிகோடி கோடிகோடி
குவலயத்தோர் ஆதியை
நாடிநாடி நாடிநாடி நாளகன்று
வீணதாய்த்

தேடிதேடி தேடிதேடித்
தேகமும் கசங்கியே
கூடிகூடி கூடிகூடி
நிற்பர்கோடி கோடியே. 331

கருத்திலான் வெளுத்திலான்
பரன்இருந்த காரணம்
இருத்திலான் ஒளித்திலான்
ஒன்றும்இரண்டும் ஆகிலான்
ஒருத்திலான் மரித்திலான்
ஒழிந்திடான் அழிந்திடான்
கருத்தில்கீயும்
கூவும்உற்றோன் கண்டறிந்த
ஆதியே. 332

வாதிவாதி வாதிவாதி
வண்டலை அறிந்திடான்
ஊதிஊதி ஊதிஊதி
ஒளிமழுங்கி உளறுவான்

வீதிவீதி வீதிவீதி விடைஎருப்
பொறுக்குவான்
சாதிசாதி சாதிசாதி
சகாரத்தைக் கண்டிடான். 333

ஆண்மைஆண்மை
ஆண்மைஆண்மை
ஆண்மைகூறும் அசடரே
காண்மையான வாதிரூபம்
காலகால காலமும்
பாண்மையாகி மோனமான
பாசமாகி நின்றிடும்
நாண்மையாகி நரலைவாயில்
நங்குமிங்கும் அங்குமே. 334

மிங்குஎன்ற அட்சரத்தின்
மீட்டுவாகிக் கூவுடன்
தூங்கமாகச் சோமனோடு
சோமன்மாறி நின்றிடும்

அங்கமா முனைச்சுழியில்
ஆகும்ஏகம் ஆகையால்
கங்குலற்றுக் கியானமுற்றுக் 335
காணவாய் சுடரொளி.

சுடரெழும்பும் சூட்சமும்
கழிமுனையின் சூட்சமும்
அடரெழும்பி ஏகமாக
அமர்ந்துநின்ற சூட்சமும்
திடரதான சூட்சமும்
திரியின்வாலை சூட்சமும்
கடலெழும்பு சூட்சமும்
கண்டறிந்தோன் ஞானியே. 336

ஞானிஞானி என்றுரைத்த
நாய்கள் கோடிகோடியே
வானிலாத மழைநாளென்ற
வாதிகோடி கோடியே
தானிலா சாகரத்தின்

தன்மைகாணா மூடர்கள்
மூனிலாமல் கோடிகோடி
முன்னறிந்த தென்பரே. 337

சூட்சமான கொம்பிலே
சுழிமுனைச் சுடரிலே
வீச்சமான வீயிலே
விபுலைதங்கும் வாயிலே
கூச்சமான கொம்பிலே
குடிஇருந்த கோவிலே
தீட்சையான தீவிலே
சிறந்ததே சிவாயமே. 338
பொங்கிநின்ற மோனமும்
பொதிந்துநின்ற மோனமும்
தங்கிநின்ற மோனமும்
தயங்கிநின்ற மோனமும்
கங்கையான மோனமும்
கதித்துநின்ற மோனமும்

திங்களான மோனமும்
சிவனிருந்த மோனமே. 339

மோனமான வீதியில்
முனைச்சுழியின் வாலையில்
பானமான வீதியில்
பசைந்தசெஞ் சுடரினில்
ஞானமான மூலையில்
நரலைதங்கும் வாயிலில்,
ஓனமான செஞ்சுடர்
உதித்ததே சிவாயமே. 340
உதித்தெழுந்த வாலையும்
உயங்கிநின்ற வாலையும்
கதித்தெழுந்த வாலையும்
காலையான வாலையும்
மதித்தெழுந்த வாலையும்
மறைந்துநின்ற ஞானமும்

கொதித்தெழுந்து கும்பலாகி
கூவும்கீயும் ஆனதே. 341
கூவும்கீயும் மோனமாகி
கொள்கையான
கொள்கையை
மூவிலே உதித்தெழுந்த
முச்சுடர் விரிவிலே
பூவிலே நறைகள்போலப்
பொருந்திநின்ற பூரணம்
ஆவிஆவி ஆவிஆவி
அன்பருள்ளம் உற்றதே. 342
ஆண்மைகூறும் மாந்தரே
அருக்கனோடும் வீதியை
காண்மையாகக் காண்பீரே
கசடறுக்க வல்லீரே
தூண்மையான வாதிசூட்சம்
சோபமாகும் ஆகுமே

நாண்மையான வாயிலில்
நடித்துநின்ற நாதமே. 343
நாதமான வாயிலில்
நடித்துநின்ற சாயலில்
வேதமான வீதியில்
விரிந்தமுச் சுடரிலே
கீதமான கீயிலே
கிளர்ந்துநின்ற கூவிலே
பூதமான வாயிலைப்
புகலறிவன் ஆதியே. 344
ஆவிஆவி ஆவிஆவி
ஐந்துகொம்பின் ஆவியே
மேவிமேவி மேவிமேவி
மேதினியில் மானிடர்
வாவிவாவி வாவிவாவி
வண்டர்கள் அறிந்திடார்
பாவிபாவி பாவிபாவி

படியிலுற்ற மாந்தரே. 345

வித்திலே முளைத்தசோதி
வில்வளையின் மத்தியில்
முத்திலே ஒளிவதாகி
மோனமான தீபமே
நத்திலே திரட்சிபோன்ற
நாதனை அறிந்திடார்
வத்திலே கிடந்துழன்ற
வாலையான சூட்சமே. 346

மாலையோடு காலையும்
வடிந்துபொங்கும் மோனமே
மாலையோடு காலையான
வாறறிந்த மாந்தரே
மூலையான கோணமின்
முளைத்தெழுந்த செஞ்சுடர்
தாலையோடு பானகன்று
தங்கி நின்ற மோனமே. 347

மோனமான வீதியில்
முடுகிநின்ற நாதமே
ஈனமின்றி வேகமான
வேகம்என்ன வேகமே
கானமான மூலையில்
கனிந்திருந்த வாலையில்
ஞானமான செஞ்சுடர் 348
நடந்ததே சிவாயமே.
உச்சிமத்தி வீதியில்
ஒழிந்திருந்த சாதியில்
பச்சியுற்ற சோமனும்
பரந்துநின்று லாவவே
செச்சியான தீபமே,
தியானமான மோனமே,
கச்சியான மோனமே,
கடந்ததே சிவாயமே. 349
அஞ்சுகொம்பில் நின்றுநாதம்

ஆலைபோல் எழும்பியே
பிஞ்சினோடு பூமலர்ந்து
பெற்றியுற்ற சுத்தமே
செஞ்சுடர் உதித்தபோது
தேசிகன் கழன்றுடன்
பஞ்சபூதம் ஆனதே 350
பறந்துநின்ற மோனமே.

சடுதியான கொம்பிலே
தத்துவத்தின் இயலிலே
அடுதியான ஆவிலே
அரன்இருந்த ஊவிலே
இடுதிஎன்ற சோலையில்
இருந்தமுச் சுடரிலே
நடுதிஎன்று நாதம்ஓடி நன்குற
அமைந்ததே. 351

அமையுமாலின் மோனமும்
அரன்இருந்த மோனமும்

சமையும்பூத மோனமும்
தரித்திருந்த மோனமும்
இமையும்கொண்ட வேகமும்
இலங்கும்உச்சி மோனமும்
தமையறிந்த மாந்தரே
சடத்தைஉற்று நோக்கிலார். 352

பாய்ச்சலூர் வழியிலே
பரன்இருந்த சுழியிலே
காய்ச்சகொம்பின் நுனியிலே
கனியிருந்த மலையிலே
வீச்சமானது ஏதடா?
விரிவுதங்கும் இங்குமே
மூச்சினோடு மூச்சைவாங்கு
முட்டிநின்ற சோதியே. 353

சோதிசோதி என்றுநாடித்
தோற்பவர் சிலவரே
ஆதிஆதி என்றுநாடும்

ஆடவர் சிலவரே
வாதிவாதி என்றுசொல்லும்
வம்பரும் சிலவரே
நீதிநீதி நீதிநீதி நின்றிடும்
முழுச்சுடர். 354

சுடரதாகி எழும்பியங்குத்
தூபமான காலமே
இடரதாய்ப்
புவியும்விண்ணும் ஏகமாய்
அமைக்கமுன்
படரதாக நின்றஆதி
பஞ்சபூதம் ஆகியே
அடரதாக அண்டம்எங்கும்
ஆண்மையாக நின்றதே. 355
நின்றிருந்த சோதியை
நிலத்தில்உற்ற மானிடர்
கண்டறிந்து கண்குளிர்ந்து

காதலுற்று உலாவுவோர்
கண்டமுற்ற மேன்முனையில்
காட்சிதன்னைக் காணுவார்
கன்றிஅற்று நாலைபொங்கி
நாதமும் மகிழ்ந்திடும். 356

வயங்குமோனச் செஞ்சுடர்
வடிந்தசோதி நாதமும்
கயங்கள்போலக் கதறியே
கருவூரற்ற வெளியிலே
பயங்கொடின்றி இன்றியே
படர்ந்துநின்ற பான்மையை
நயங்கள்கோவென்
றேநடுங்கி நங்கையான
தீபமே. 357

தீபஉச்சி முனையிலே
திவாகரத்தின் கழியிலே

கோபமாறு கூவிலே
கொதித்துநின்ற தீயிலே
தாபமான மூலையில்
சமைந்துநின்ற சூட்சமும்
சாபமான மோட்சமும் 358
தடிந்துநின்று இலங்குமே.
திவாகரம் - சூரிய ஒளி

தேசிகன் சுழன்றதே
திரிமுனையின் வாலையில்
வேசமோடு வாலையில்
வியன்இருந்த மூலையில்
நேசசந்தி ரோதயம்
நிறைந்திருந்த வாயிலில்
வீசிவீசி நின்றதே
விரிந்துநின்ற மோனமே.
359

உட்கமல மோனமீதில்
உயங்கிநின்ற நந்தியை
விக்கலோடு கீயுமாகி
வில்வளைவின் மத்தியில்
முட்பொதிந்தது என்னவே
முடுகிநின்ற செஞ்சுடர்
கட்குவைகள் போலவும் 360
கடிந்துநின்ற காட்சியே.
உந்தியில் சுழிவழியில்
உச்சியுற்ற மத்தயில்
சந்திரன் ஒளிகரணம்
தாண்டிநின்ற செஞ்சுடர்
பந்தமாக வில்வளைவில்
பஞ்சபூத விஞ்சையாம்
கிந்துபோல கீயில்நின்று
கீச்சுமூச்சு என்றதே. 361

செச்சையென்ற மூச்சினோடு

சிகாரமும் வகாரமும்
பச்சையாகி நின்றதே
பரவெளியின் பான்மையே
இச்சையான ஊவிலே
இருந்தெழுந்த ஈயிலே
உச்சியான கோணத்தில் 362
உதித்ததே சிவாயமே.

ஆறுமூலைக் கோணத்தில்
அமைந்தஒன்ப தாத்திலே
தாறுமென்று நங்கையான
நாவியும் தெரிந்திடக்
கூறுமென்று ஐவர்அங்கு
கொண்டுநின்ற மோனமே
பாறுகொண்டு நின்றது
பரந்ததே சிவாயமே. 363

பறந்ததே கறந்தபோது
பாய்ச்சலூரின் வழியிலே

பிறந்ததே பிராணன்அன்றிப்
பெண்ணும்ஆணும் அல்லவே
துறந்ததோ சிறந்ததோ
தூயதுங்கம் ஆனதோ
இறந்தபோதில் அன்றதே
இலங்கிடும் சிவாயமே. 364

அருளிருந்த வெளியிலே
அருக்கன்நின்ற இருளிலே
பொருளிருந்த சுழியிலே
புரண்டெழுந்த வழியிலே
தெருளிருந்த கலையிலே
தியங்கிநின்ற வலையிலே
குருவிருந்த வழியினின்று
ஊவும்ஈயும் ஆனதே. 365

ஆனதோர் எழுத்திலே
அமைந்துநின்ற ஆதியே
கானமோடு தாலமீதில்

கண்டறிவது இல்லையே;
தானும்தானும் ஆனதே
சமைந்தமாலை காலையில்
ஏனலோடு மாறுபோல்
இருந்ததே சிவாயமே. 366

ஆறுகொண்ட வாரியும்
அமைத்துநின்ற தெய்வமும்
தூறுகொண்ட மாரியும்
துலங்கிநின்ற தூரமும்
வீறுகொண்ட மோனமும்
விளங்கும் உட்கமலமும்
மாறுகொண்ட ஊவிலே
மடிந்ததே சிவாயமே. 367

வாயில்கண்ட கோணமில்
வயங்கும்ஐவர் வைகியே
சாயல்கண்டு சார்ந்ததும்
தலைமன்னாய் உறைந்ததும்

காயவண்டு கண்டதும்
கருவூர்அங்குச் சென்றதும்
பாயும்என்று சென்றதும்
பறந்ததே சிவாயமே. 368

பறந்ததே துறந்தபோது
பாய்ச்சலூர் வழியிலே
மறந்ததே கவ்வுமுற்ற
வாணர்கையின் மேவியே
பிறந்ததே இறந்தபோதில்
பீடிடாமற் கீயிலே
சிறந்துநின்ற மோனமே
தெளிந்ததே சிவாயமே. 369

வடிவுபத்ம ஆசனத்து
இருத்திமூல அனலையே
மாருதத்தி னால் எழுப்பி
வாசல்ஐந்து நாலையும்

முடிவுமுத்தி ரைப்படுத்தி
மூலவீணா தண்டினால்
முளரிஆல யம்கடந்து 370
மூலநாடி ஊடுபோம்.
அடிதொடக்கி முடியளவும்
ஆறுமா நிலம்கடந்து
அப்புறத்தில் வெளிகடந்த
ஆதிஎங்கள் சோதியை
உடுபதிக்கண் அமுதருந்தி
உண்மைஞான உவகையுள்
உச்சிபட்டு இறங்குகின்ற
யோகிநல்ல யோகியே. 371
உள்ளதோ புறம்பதோ
உயிர்ஒடுங்கி நின்றிடம்
மெள்ளவந்து கிட்டிநீர்
வினாவவேண்டும் என்கிறீர்
உள்ளதும் பிறப்பதும்

ஒத்தபோது நாதமாம்
கள்ளவாசலைத் திறந்து
காணவேண்டும் மாந்தரே. 372

முத்திசித்தி தொந்தமாம்
முயங்குகின்ற மூர்த்தியை
மற்றுஉதித்த ஐம்புலன்கள்
ஆகுமத்தி அப்புலன்
அத்தர்நித்தர் காள்கண்டர்
அன்பினால் அனுதினம்
உச்சரித்து உளத்திலே
அறிந்துணர்ந்து கொண்மினே. 373

மூன்றிரண்டும் ஐந்துமாய்
முயன்றெழுந்த தேவராய்
மூன்றிரண்டும் ஐந்ததாய்
முயன்றதே உலகெலாம்
ஈன்றதாயும் அப்பனும்
இயங்குகின்ற நாதமாய்த்

தோன்றும்ஓர் எழுத்திேனாடு
சொல்லலொன்றும்
இல்லையே. 374
வெளியுருக்கி அஞ்செழுத்து
விந்துநாத சந்தமும்
தளியுருக்கி நெய்கலந்து
சகலசுத்தி ஆனதும்
வெளியிலும்
அவ்வினையிலும் இருவரை
அறிந்தபின்
வெளிகடந்த தன்மையால்
தெளிந்ததே சிவாயமே. 375
மந்திரங்கள் கற்றுநீர்
மயங்குகின்ற மாந்தரே
மந்திரங்கள் கற்றுநீர்
மரித்தபோது சொல்வீரோ?
மந்திரங்கள் உம்முளே

மதித்தநீரும் உம்முளே
மந்திரங்கள் ஆவது
மனத்தின்ஐந்து எழுத்துமே. 376
முப்புறத்தில் அப்புறம்
முக்கண்ணன்வினைவிலே
சிற்பரத்துள் உற்புனம்
சிவாயம்அஞ் செழுத்துமே
தற்பரம் உதித்துநின்ற
தாணுஎங்கும் ஆனபின்
இப்புறம் ஒடுங்குமோடி
எங்கும்லிங்கம் ஆனதே. 377

ஆடிநின்ற சீவன்ஓர்
அஞ்சுபஞ்ச பூதமோ
கூடிநின்ற சோதியோ,
குலாவிநின்ற மூலமோ?
நாடுகண்டு நின்றதோ,

நாவுகற்ற கல்வியோ?
வீடுகண்டு விண்டிடினி
வெட்டவெளியும் ஆனதே. 378

உருத்தரித்த போதுசீவன்
ஒக்கநின்ற உண்மையும்
திருத்தமுள்ளது ஒன்றிலும்
சிவாயம்அஞ் செழுத்துமாம்.
இருத்துநின்று உறுத்தடங்கி
ஏகபோகம் ஆனபின்
கருத்தினின்று உதித்ததே
கபாலம்ஏந்தும் நாதனே. 379

கருத்தரித்து உதித்தபோது
கமலபீடம் ஆனதும்
கருத்தரித்து உதித்தபோது
காரணங்கள் ஆனதும்
கருத்தரித்து உதித்தபோது
காண்இரண்டு கண்களாய்க்

கருத்தினின்று உதித்ததே
கபாலம் ஏந்தும் நாதனே. 380

ஆனவன்னி மூன்றுகோணம்
ஆறிரண்டு எட்டிலே
ஆனசீவன் அஞ்செழுத்து
அகாரமிட்டு அலர்ந்ததும்
ஆனசோதி உண்மையும்
அனாதியான உண்மையும்
ஆனதாய் தானதாய்
அவலமாய் மறைந்திடும். 381

ஈன்றெழுந்த எம்பிரான்
திருவரங்க வெளியிலே
நான்றபாம்பின் வாயினால்
நாலுதிக்கும் ஆயினான்
மூன்றுமூன்று வளையமாய்
முப்புரம் கடந்தபின்

ஈன்றெழுந்த அவ்வினோசை 382
எங்குமாகி நின்றதே.

எங்கும்எங்கும் ஒன்றலோ
ஈரேழ்லோகமும் ஒன்றலோ?
அங்கும்இங்கும் ஒன்றலோ
அனாதியானது ஒன்றலோ?
தங்குதாபரங்களும்
தரித்தவாரது ஒன்றலோ?
உங்கள்எங்கள் பங்கினில்
உதித்ததே சிவாயமே. 383

அம்பரத்தில் ஆடும்சோதி
யானவன்னி மூலமாம்
அம்பரமும் தம்பரமும்
அகோரமிட்டு அலர்ந்ததே
அம்பரக் குழியிலே
அங்கமிட்டு ருக்கிட
அம்பரத்தில் ஆதியோடு

அமர்ந்ததே சிவாயமே. 384

வாடிலாத பூமலர்ந்து
வண்டுரிசை நாவிலே
ஓடிநின்று உருவெடுத்து
உகாரமாய் அலர்ந்ததும்
ஆடிஆடி அங்கமும்
அகப்படக் கடந்தபின்
கூடிநின்று உலாவுவமே
குருவிருந்த கோலமே. 385

விட்டடி விரைத்ததோ
அவ்வேர்உருக்கி நின்றதோ
எட்டிநின்ற சீவனும்
ஈரேழ்லோகம் கண்டதோ?
தட்டுருவம் ஆகிநின்ற
சதாசிவத்து ஒளியதோ
வட்டவீடு அறிந்தபேர்கள்
வானதேவர் ஆவரோ.

386

வானவர் நிறைந்தசோதி
மானிடக் கருவிலே
வானதேவர் அத்தனைக்குள்
வந்தடைவர் வானவர்
வானகமும் மண்ணகமும்
வட்டவீடு அறிந்தபின்
வானெலாம் நிறைந்தமன்னு
மாணிக்கங்கள் ஆனவே. 387

பன்னிரண்டு கால்நிறுத்தி
பஞ்சவண்ணம் உற்றிடின்
மன்னியே வெளிக்குள்நின்று
வேறிடத்து அமர்ந்ததும்
சென்னியாம் தலத்திலே
சீவன்நின்று இயங்கிடும்
பன்னிஉன்னி ஆய்ந்தவர்
பரப்பிரம்மம் ஆனதே. 388

உச்சகண்டு கண்கள்கட்டி
உண்மைகண்டது எவ்விடம்?
மச்சுமாளி கைக்குளே
மானிடம் கலப்பிரேல்
எச்சிலான வாசலும்
ஏகபோகம் ஆய்விடும்
பச்சைமாலும் ஈசனும்
பரத்ததே சிவாயமே. 389

வாயிலிட்டு நல்லுரிசை
அட்சரத் தொலியிலே
கோயிலிட்டு வாவியும்
அங்கொம்பிலே உலர்ந்ததும்
ஆயிலிட்ட காயமும்
அனாதியிட்ட சீவனும்
வாயுவிட்ட வன்னியும்
வளர்ந்ததே சிவாயமே. 390

அட்சரத்தை உச்சரித்து
அனாதியங்கி மூலமாய்
அட்சரத்தை யும்திறந்து
அகோரமிட்டு அலர்ந்ததும்
மட்சரத்தில் உட்கரம்
அகப்படக் கடந்தபின் 391
அட்சரத்தில் ஆதியோடு
அமர்ந்ததே சிவாயமே.

கோயிலும் குளங்களும்
குறியினிற் குருக்களாய்
மாயிலும் மடியிலும்
மனத்திலே மயங்குறீர்,
ஆயனை அரனையும்
அறிந்துணர்ந்து கொள்விரேல்
தாயினும் தகப்பனோடு
தான்அமர்ந்தது ஒக்குமே. 392

கோயில் எங்கும் ஒன்றலோ,

குளங்கள்நீர்கள் ஒன்றலோ?
தேயுவாயு ஒன்றலோ,
சிவனும்அங்கே ஒன்றலோ?
ஆயசீவன் எங்குமாய்
அமர்ந்துதவாரது ஒன்றலோ?
காயம்ஃதறிந்த பேர்கள்
காட்சியாவர் காணுமே. 393

காதுகண்கள் மூக்குவாய்
கலந்தவாரது ஒன்றலோ?
சோதியிட்டு எடுத்ததும்
சுகங்கள்அஞ்சும் ஒன்றலோ?
ஓதிவைத்த சாத்திரம்
உதித்தவாரது ஒன்றலோ?
நாதவீடு அறிந்தபேர்கள்
நாதர்ஆவர் காணுமே. 394

அவ்வுதித்த அட்சரத்தின்
உட்கலந்த அட்சரம்

சவ்வுதித்த மந்திரம்
சம்புளத்து இருந்ததால்
மவ்வுதித்த மாய்கையால்
மயங்குகின்ற மாந்தர்காள்,
உவ்வுதித்தது அவ்வுமாய்
உருத்தரித்தது உண்மையே. 395

அகாரமென்னும் அக்கரத்தில்
அக்கரம் ஒழிந்ததோ?
அகாரமென்னும் அக்கரத்தில்
அவ்வுவந்து உதித்ததோ?
உகாரமும் அகாரமும்
ஒன்றிநன்று நின்றதோ?
விகாரமற்ற ஞானிகாள், 396
விரிந்துரைக்க வேணுமே.
சத்தியாவது உன்னுடல்,
தயங்குசீவன் உட்சிவம்

பித்தர்காள் இதற்குமேல்
பிதற்றுகின்றது இல்லையே.
சுத்திஐந்து கூடம்ஒன்று
சொல்லிறந்த தோர்வெளி
சத்திசிவமும் ஆகிநின்று 397
தண்மையாவது உண்மையே.

சுக்கிலத் துளையிலே
சுரோணிதக் கருவுளே
முச்சதுர வாசலில்
முளைத்தெழுந்த மேட்டினில்
மெய்ச்சதுர மெய்யுளே
விளங்குஞான தீபமாய்
உச்சரிக்கும் மந்திரம் ஓம்நம
சிவாயமே.
398

அக்கரம் அனாதிஅல்ல
ஆத்துமம் அனாதிஅல்ல

புக்கிருந்த பூதமும்
புலன்களும் அனாதிஅல்ல
தக்கமிக்க நூல்களும்
சாத்திரமும் அனாதிஅல்ல
ஒக்கநின்று உடன்கலந்த 399
உண்மைகாண் அனாதியே.
மென்மையாகி நின்றதேது
விட்டுநின்று தொட்டதேது?
உண்மையாக நீயுரைக்க
வேணும்எங்கள் உத்தமா?
பெண்மையாக நின்றதொன்று
விட்டுநின்று தொட்டதை
உண்மையாய் உரைக்கமுத்தி
உட்கலந்து இருந்ததே. 400
அடக்கினால் அடங்குமோ
அண்டம்அஞ் செழுத்துளே?
உடக்கினால் எடுத்தகாயம்

உண்மையென்று உணர்ந்துநீ
சடக்கிலாறு வேதமும்
தரிக்கஓதி லாமையால்
விடக்குநாயு மாயவோதி
வேறுவேறு பேசுமோ? 401
உடக்கு - உள்மர்மம்

உண்மையான சக்கரம்
உபாயமாய் இருந்ததும்
தண்மையான காயமும்
தரித்தரூபம் ஆனதும்
வெண்மையாகி நீரலே
விளைந்துநின்ற தானதும்
உண்மையான ஞானிகாள்
விரிந்துரைக்க வேணுமே. 402
எள்ளகத்தில்
எண்ணெய்போல் எங்குமாகி

எம்பிரான்
உள்ளகத்தி லேயிருக்க
ஊசலாடும் மூடர்காள்
கொள்ளைநாயின் வாலினைக்
குணக்கெடுக்க வல்லீரேல்
வள்ளலாகி நின்றசோதி
காணலாகும் மெய்மையே. 403

வேணும் என்ற ஞானமும்
விரும்புகின்ற நூலிலே
தாணுஉண்டங்கு என்கிறீர்
தரிக்கிலீர், மறக்கிலீர்
தாணுவொன்று மூலநாடி
தன்னுள்நாடி உம்முளே
காணும்அன்றி வேறுயாவும்
கனாமயக்கம் ஒக்குமே. 404
வழக்கிலே உரைக்கிறீர்
மனத்துளே தவக்கிறீர்

உழக்கிலாது நாழியான
வாறுபோலும் ஊமைகாள்,
உழக்குநாலு நாழியான
வாறுபோலும் உம்முளே
வழக்கிலே உரைக்கிறீர்
மனத்துள்ஈசன் மன்னுமே. 405

அகாரமானது அம்பலம்
அனாதியானது அம்பலம்
உகாரமானது அம்பலம்
உண்மையானது அம்பலம்
மகாரமானது அம்பலம்
வடிவானது அம்பலம்
சிகாரமானது அம்பலம்
தெளிந்ததே சிவாயமே. 406
சக்கரம் பறந்தோடி
சக்கரம்மேல் பலகையாய்

செக்கிலாடும்
எண்ணெய்போலச்
சிங்குவாயு தேயுவும்
உக்கிலே ஒளிக்கலந்து
உகங்களும் கலக்கமாய்ப்
புக்கிலே புகுந்தபோது 407
போனவாறது எங்ஙனே?
வளர்ந்தெழுந்த
கொங்கைதன்னை
மாயமென்று எண்ணிநீர்
அருள்கொள்சீவ ராருடம்பை
உண்மையகத் தேர்வீர்காள்
விளங்குஞானம் மேவியே
மிக்கோர்சொல்லலைக்
கேட்பிரேல்
களங்கமற்று நெஞ்சுளே
கருத்துவந்து புக்குமே.

408

நாலுவேதம் ஓதுகின்ற
ஞானம்ஒன்று அறிவீரோ?
நாலுசாமம் ஆகியே
நவின்றஞான போதமாய்
ஆலம்உண்ட கண்டனும்
அயனும்அந்த மாலுமாய்ச்
சாலஉன்னி நெஞ்சுளே
தரித்ததே சிவாயமே. 409
சுற்றும்என்று சொல்வதும்
சுருதிமுடிவில் வைத்திடீர்
அத்தம்நித்தம் ஆடியே
அர்ந்திருந்தது எவ்விடம்?
பத்திமுற்றி அன்பர்கள்
பரத்தில்ஒன்று பாழது,
பித்தரே, இதைக்கருதி
பேசலாவது எங்ஙனே? 410

எங்ஙனே விளக்கதற்கு
ஏற்றவாறு நின்றுதான்
எங்ஙனே எழுந்தருளி
ஈசன்நேசர் என்பரேல்
அங்ஙனே இருந்தருளும்
ஆதியான தற்பரம்
சிங்கம்அண்மி
யானைபோலத் திரிமலங்கள்
அற்றவே. 411
அற்றவுள் அகத்தையும்
அலகிடும் மெழுக்கிடும்
மெத்ததீபம் இட்டதில்
ப்ரவாதபூசை ஏய்த்தியே
நற்றவம் புரிந்தும்ஏக
நாதர்பாதம் நாடியே
கற்றிருப்ப தேசரிதை
கண்டுகொள்ளும் உம்முளே.

412

பார்த்துநின்றது அம்பலம்
பரமன்ஆடும் அம்பலம்
கூத்துநின்றது அம்பலம்
கோரமானது அம்பலம்
வார்த்தையானது அம்பலம்
வன்னியானது அம்பலம்
சீற்றமாவது அம்பலம்
தெளிந்ததே சிவாயமே. 413
சென்றுசென்று இடந்தொறும்
சிறந்தசெம்பொன் அம்பலம்
அன்றும்இன்றும் நின்றதோர்
அனாதியான அம்பலம்
என்றும்என்றும் இருப்பதோர்
இறுதியான அம்பலம்
ஒன்றிஒன்றி நின்றதுள்
ஒளிந்ததே சிவாயமே. 414

தந்தையாய் தருமம்நீ சகலதே
வதையும்நீ
சிந்துநீ தெளிவும்நீ
சித்திமுத்தி தானும்நீ
விந்துநீ விளைவுநீ மேலதாய்
வேதம்நீ
எந்தைநீ இறைவன்நீ என்னை
ஆண்ட ஈசனே. 415

எப்பிறப்பி லும்பிறந்து
இறந்துஅழிந்த ஏழைகாள்
இப்பிறப்பி லும்பிறந்து
என்னநீறு பூசுறீர்
அப்புடன் மலம்அறுத்தே
ஆசைநீக்க வல்லீரேல்
செப்புநாத ஓசையில்
தெளிந்துகாணல் ஆகுமே. 416

அப்பு - நீர்

எட்டுயோகம் ஆனதும்
இயங்குகின்ற நாதமும்
எட்டுஅக்க ரத்துளே
உகாரமும் அகாரமும்
விட்டலர்ந்து மந்திரம்
வீணாதண்டின் ஊடுபோய்
அட்ட அட்சரத்துளே
அமர்ந்ததே சிவாயமே. 417

பிரான்பிரான் என்றுநீர்
பிதற்றுகின்ற மூடரே
பிரானைவிட்டு எம்பிரான்
பிரிந்தவாறது எங்ஙனே?
பிரானுமாய்ப் பிரானுமாயப்
பேருலகந் தானுமாய்
பிரானிலே முளைத்தெழுந்த
பித்தர்காணும் உம்முடல். 418

அந்த - முடிவு
ஆதியில்லை அந்தமில்லை
ஆனநாலு வேதமில்லை
சோதியில்லை
சொல்லுமில்லை
சொல்லிறந்த தூவெளி
நீதியில்லை நேசமில்லை
நிச்சயப் படாததும்
ஆதிகண்டு கொண்டபின்
அஞ்செழித்தும் இல்லையே. 419
அம்மையப்பன் அப்பன்நீர்
அமர்ந்தபோது அறிகிலீர்
அம்மையப்பன் ஆனநீர்
ஆதியான் பாசமே
அம்மையப்பன்
நின்னைஅன்றி யாருமில்லை
ஆனபின்

அம்மையப்பன்
நின்னைஅன்றி யாருமில்லை
இல்லையே. 420

முந்தஓர் எழுத்துளே
முளைத்தெழுந்த செஞ்சுடர்
அந்தஓர் எழுத்துளே
பிறந்துகாயம் ஆனதும்
அந்தஓர் எழுத்துளே ஏகமாகி
நின்றதும்
அந்தஓர் எழுத்தையும்
அறிந்துணர்ந்து கொள்ளுமே. 421
கூட்டம்இட்டு நீங்களும்
கூடிவேதம் ஓதுறீர்
ஏட்டகத்துள் ஈசனும்
இருப்பதென்ன எழுத்துளே?
நாட்டம் இட்டு நாடிடும்

நாலுமூன்று தன்னுளே
ஆட்டகத்துள் ஆடிடும் 422
அம்மைஆணை உண்மையே.

ஆட்டகம் - ஆனந்த
தாண்டவம் ஆடுகின்ற இடம்.

காக்கை மூக்கை ஆமையார்
எடுத்துரைத்த காரணம்
நாக்கை ஊன்றி உள்வளைத்து
ஞானநாடி ஊடுபோய்
ஏக்கைநோக்க அட்சரம்
இரண்டெழுத்தும் ஏத்திடில்
பார்த்தபார்த்த திக்கெல்லாம்
பரப்பிரம்மம் ஆனதே. 423

ஏக்கை - ஏக்கம்

ஓசைஉள்ள கல்லைநீர்
உடைத்திரண்டாய் செய்துமே
வாசலில் பதித்தகல்லை
மழுங்கவே மிதிக்கிறீர்
பூசைக்கு வைத்தகல்லில்
பூவும்நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு உகந்தகல் 424
எந்தக்கல்லு சொல்லுமே?
ஓட்டுவைத்துக் கட்டிநீர்
உபாயமான மந்திரம்
கட்டுபட்ட போதிலும்
கருத்தன்அங்கு வாழுமோ?
எட்டும்எட்டும் எட்டுளே
இயங்குகின்ற வாயுவை
வட்டம்இட்ட யவ்விலே
வைத்துணர்ந்து பாருமே. 425
இந்தஊரில் இல்லைஎன்று

எங்குநாடி ஓடுறீர்?
அந்தஊரில்ஈசனும் அமர்ந்து
வாழ்வது எங்ஙனே?
அந்தமான பொந்திலாறில்
மேவிநின்ற நாதனை
அந்தமான சீயில்அவ்வில்
அறிந்துணர்ந்து கொள்ளுமே. 426

புக்கிருந்த தும்முளே
பூரியிட்ட தோத்திரம்
தொக்குசட்சு சிங்குவை
ஆக்கிராணன் சூழ்ந்திடில்
அக்குமணியும் கொன்றைசூடி
அம்பலத்துள் ஆடுவார்
மிக்கசோதி அன்புடன்
விளம்பிடாது பின்னையே. 427

பின்னெழுந்த மாங்கிசத்தைப்
பேதையர் கண்பற்றியே

பின்புமாங்கி சத்தினால்
போகமாய்கை பண்ணினால்
துன்புறும் வினைகள்தாம்
சூழ்ந்திடும்பின் என்றலோ
அன்பராய் இருந்தபேர்கள்
ஆறுநீந்தல் போல்வீடே. 428

விட்டிருந்த தும்முளே
விசனமற்று இருக்கிறீர்
கட்டிவைத்த வாசல்மூன்று
காட்சியான வாசல்ஒன்று
கட்டிவைத்த வாசலும்
கதவுதாள் திறந்துபோய்த்
திட்டமான ஈசனைத்
தெளியுமாங் கிசத்துளே. 429

ஆகும் ஆகும் ஆகுமே
அனாதியான அப்பொருள்
ஏகர்பாதம் நாடிநாடி

ஏத்திநிற்க வல்லீரேல்
பாகுசேர்மொழி உமைக்குப்
பாலனாகி வாழலாம்
வாகுடன் நீர்வன்னியை
சமருவியே வருந்திடீர். 430
வாகு - வலிமை

பாலகனாக வேணும்என்று
பத்திமுற்றும் என்பிரேல்
நாலுபாதம் உண்டதில்
நினைந்திரண்டு அடுத்ததால்
மூலநாடி தன்னில்வன்னி
மூட்டிஅந்த நீருண
ஏலவார் குழலியூடே
ஈசர்பாதம் எய்துமே. 431

எய்துநின்னை அன்பினால்

இறைஞ்சி ஏத்தவல்லீரேல்
எய்தும் உண்மைதன்னிலே
இறப்பிறப்பு அகற்றிடும்
மைஇலங்கு கண்ணிபங்கள்
வாசிவானில் ஏறிமுன்
செய்தவல் வினைகளும் 432
சிதறும்அஃது திண்ணமே.
பங்கன் - பார்வதியை
இடப்பாகத்தில் உடையவன்
வாசி - காற்று

திண்ணம்என்று சேதிசொன்ன
செவ்வியோர்கள்
கேண்மினோ
அண்ணல் அன்புளன்புருகி
அறிந்து நோக்கலாயிடும்
மண்ணும் அதிரவிண்ணும்

அதிரவாசியை நடத்திடில்
நண்ணிளங்கள் ஈசனும் 433
நமதுகடலில் இருப்பனே.
இருப்பன்
எட்டெட்டுஎண்ணிலே
இருந்துவேற தாகுவன்
நெருப்பவாயு நீருமண்ணும்
நீள்விசும்பும் ஆகுவன்
கருப்புகுந்து காலமே
கலந்தசோதி நாதனைக்
குருப்புனலில் மூழ்கினார்
குறித்துணர்ந்து கொள்வரே. 434
கொள்ளுவார்கள் சிந்தையில்
குறிப்புணர்ந்த ஞானிகள்
அள்ளுவார்கள் பக்குவத்தில்
வேண்டிவேண்டி ஏத்தினால்
உள்ளுமாய்ப் புறம்புமாம்

உணர்வதற்கு உணர்வுமாய்த்
தெள்ளிதாக நின்றசோதி
செம்மையைத் தெளிந்திடே. 435
தெளிந்தநற் சரியைதன்னில்
சென்று சாலோகம்பெறும்
தெளிந்தநற் கிரியைபூசை
சேரலாம் சாமீபமே
தெளிந்தநல்ல யோகம்
தன்னில் சேரலாகும் சாரூபம்
தெளிந்தஞானம் நான்கிலும்
சேரலாம் சாயுச்யமே. 436
சேருவார்கள் ஞானம்என்று
செப்புவர் தெளிவுளோர்
சேருவார்கள் நாலுபாதச்
செம்மைஎன்ற தில்லையே
சேருவார்கள் சிவகதி
திருவருளைப் பெற்றபேர்

சேருமாறு கண்டுநாலும்
செய்தொழில் திடப்படே. 437

திறமலிக்கு நாலுபாதம்
செம்மையும் திடப்படார்
அறிவிலிகள் தேசநாடி
அவத்திலே அலைவதே
குறியதனைக் காட்டிஉள்
குறித்துநோக்க வல்லீரேல்
வெறிகமழ் சடையுடையோன்
மெய்ப்பதம் அடைவரே. 438

அடைவுளோர்கள் முத்தியே
அறிந்திடாத மூடரே,
படையுடைய தத்துவமும்
பாதகங்கள் அல்லவோ?
மடைதிறக்க வாரியின்
மடையில் ஏறு மாறுபோல்

உடலில்மூல நாடியைஉயர 439
ஏற்றி ஊன்றிடே.

ஊன்றிஏற்றி மண்டலம்
உருவிமூன்று தாள்திறந்து
ஆன்றுதந்தி ஏறிடில்
அமுதம்வந்து இறங்கிடும்
நான்றிதென்று தொண்டருக்கு
நாதனும் வெளிப்படும்
ஆன்றியும் உயிர்ப்பரம்
பொருந்திவாழ் வதாகவே. 440

தந்தி - நாடி

ஆகமூல நாடியில்
அனல்எழுப்பி அன்புடன்
மோகமான மாயையில்
முயல்வதும் ஒழிந்திடில்
தாகமேரு நாடியே

அனேகமான வாறுபோல்
ஏகர்பாதம் அன்புடன்
இறைஞ்சினார் அறிவரே. 441

அறிந்துநோக்கி உம்முளே
அயந்தியானம் உம்முளே
பிறந்திராமல் ஏகர்பாதம்
பெற்றிருப்பது உண்மையே
அறிந்துமீள வைத்திடா
வகையுமரணம் ஏத்தினார்
செறிந்துமேலை வாசலைத்
திறந்துபாரும் உம்முளே. 442
சோதியாக உம்முளே
தெளிந்துநோக்க வல்லீரேல்
சோதிவந்து உதித்திடும்
துரியகீதம் உற்றிடும்
ஆதி சக்கிரத்தினில்
அமர்ந்துதீர்த்தம் ஆடுவன்

பேதியாது கண்டுகொள்
பிராணனைத் திருத்தியே. 443

திருவுமாகிச் சிவனுமாகித்
தெளிந்துளோர்கள்
சிந்தையில்
மருவிலே எழுந்துவீசும்
வாசனைய தாகுவன்
கருவிலே விழுந்தெழுந்த
கந்மவாத னைஎலாம்
பரிதமுன் இருளதாய்
பரியும்அங்கி பாருமே. 444
பரிதி - சூரியன் அங்கி -
நெருப்பு

பாரும்எந்தை ஈசன்வைத்த
பண்பிலே இருந்துநீர்

சேருமே நடுவறிந்து
செம்மையான அப்பொருள்
வேரையும் முடியையும்
விரைந்துதேடி மால்அயன்
பார்இடந்து விண்ணிலே
பிறந்தும்கண்டது இல்லையே. 445
மால் - திருமால் பார் -
உலகம் இடந்து - தோண்டி

கண்டிலாது அயன்மால்என்று
காட்சியாகச் சொல்லுறீர்
மிண்டினால் அரசனும்
மேவலாய் இருக்குமோ?
தொண்டுமட்டும் அன்புடன்
தொழுதுநோக்க வல்லீரேல்
பண்டுமுப் புரம்எரிந்த
பத்திவந்து முற்றுமே.

446

முற்றுமே அவன்ஒழிந்து
முன்பின்ஒன்றும்
காண்கிலேன்
பற்றிலாத ஒன்றுதன்னை
பற்றிநிற்க வல்லது
கற்றிதாலோ ஈசர்பாதம்
காணலா யிருக்குமோ?
பெற்றபேறை அன்புடன்
பிரியமாகக் கேளுமே.

447

கேட்டுநின்ற உன்னிலை
கிடைத்த காலந்தன்னுளே
வாட்டமுள்ள தத்துவ
மயக்கமும் அகற்றிடும்
வீட்டிலே வெளியதாகும்
விளங்கவந்து நேரிடும்

கூட்டிவன்னி மாருதம் 448
குயத்தைவிட்டு எழுப்புமே.
எழுப்பி மூலநாடியை
இதப்படுத்த லாகுமோ
மழுப்பிலாத சபையைநீர்
வலித்துவாங்க வல்லீரேல்
சுழுத்தியும் கடந்துபோய்
சொப்பனத்தில் அப்புறம்
அழுத்திஓர் எழுத்துளே
அமைப்பதுஉண்மை ஐயனே. 449

அல்லதில்லை என்றுதான்
ஆவியும் பொருளுடல்
நல்லஈசர் தாள்இணைக்கும்
நாதனிக்கும் ஈந்நிலை
என்றும்என்னுள் நேசமும்
வாசியை வருந்தினால்
தொல்லையாம்

வினைவிடென்று தூரதூரம்
ஆனதே. 450
ஆனதே பதியது உயிர்
அற்றதே பசுபாசம்
போனவே மலங்களும்
புலன்களும் வினைகளும்
கானகத்தில் இட்டதீயில்
காற்றுவந்து அடுத்ததோ?
ஊனகத்தில் வாயுஉன்னி
ஒன்றியே உலாவுமே. 451
உலாவும் உவ்வும்
அவ்வுமாய் உதித்தடர்ந்து
நின்றதும்
உலாவிஜம் புலன்களும்
ஒருதலத்து இருந்திடும்
நிலாவும்அங்கு நேசமாகி
நின்றும் அமுதம்உண்டுதாம்

உலாவும் எங்கள் ஈசனைக் 452
குறித்துணர்ந்து கும்பிடே.
கும்பிடும் கருத்துளே
குகனைஐங் கரனையும்
நம்பியே இடம்வலம்
நமக்கரித்து நாடிட
எம்பிரானும் அம்மையும்
இருத்தியே நடுவனைத்
தும்பிபோல வாசகம்
தொடர்ந்துசோம்பி நீங்குமே. 453
நீங்கும்ஐம் புலன்களும்
நிறைந்தவல் வினைகளும்
ஆங்காரமாம் ஆசையும்
அருந்தடந்த பாதமும்
ஒங்காரத்தின் உள்ளிருந்து
ஒன்பதொழிந் தொன்றிலத்
தூங்காஈசர் சொற்படி

துணிந்திருக்க சுத்தமே. 454

கருக்கலந்த காலமே
கண்டுநின்ற காரணம்
உருக்கலந்த போதலோ
உன்னைநான் உணர்ந்தது
விரக்கில்என் மறைக்கில்என்
வினைக்கிசைந்த போதெலாம்
உருக்கலந்து நின்றபோது
நீயும்நானும் ஒன்றலோ? 455
ஞானநூல்கள் தேடியே
நவின்றஞான யோகிகாள்,
ஞானமான சோதியை
நாடிஉள் அறிகிலீர்
ஞானம்ஆகி நின்றதோர்
நாதனை அறிந்தபின்
ஞானம்அல்லது
இல்லைவேறு நாம் உரைத்த

துண்மையே 456

கருத்தரிப்ப தற்குமுன்
காயம்நின்றது எவ்விடம்?
உருத்தரிப்ப தற்குமுன்
உயிர்ப்புநின்றது எவ்விடம்?
மருட்பொதிந்த சிந்தையில்
மயக்கம்நின்றது எவ்விடம்?
விருப்புணர்ந்த ஞானிகாள்
விரிந்துரைக்க வேணுமே. 457

கருவினில் கருவதாய்
எடுத்தஏழு தோற்றமும்
இருவினைப் பயத்தினால்
பிறந்திறந்து உழன்றிடும்
மறுவினைப் பிறவிமூன்று
காலமும் வகுத்தபின்
உறுவினைப்பயன் இதென்று
உணர்ந்தஞானி சொல்லுமே.

458

வாயில்எச்சில் போகவே
நீர்குடித்துத் துப்புவீர்
வாயிருக்க எச்சில்போன
வாறதென்ன எவ்விடம்?
வாயில்எச்சில் அல்லவோ
நீர்உரைத்த மந்திரம்?
நாயினை அறிந்தபோது
நாடும்எச்சில் ஏதுகொல்? 459
தொடக்கதென்று நீர்விழத்
தொடங்குகின்ற ஊமர்காள்
தொடக்கிருந்தது எவ்விடம்?
சுத்தியானது எவ்விடம்?
தொடக்கிருந்த வாறறிந்து
சுத்தபண்ண வல்லீரேல்
தொடக்கிலாத சோதியைத்
தொடர்ந்துகாண லாகுமே.

460

மேதியோடும் ஆவுமே
விரும்பியே புணர்ந்திடில்
சாதிபேத மாம்உருத்
தரிக்கும்ஆறு போலவே
வேதம்ஓது வானுடன்
புலைச்சிசென்று மேவிடில்
பேதமாய்ப் பிறக்கிலாத
வாறதென்ன பேசுமே. 461

மேதி - எருமை

வகைக்குலங் கள்பேசியே
வழக்குரைக்கும் மாந்தர்காள்
தொகைக்குலங்
கள்ஆனநேர்மை நாடியே
உணர்ந்தபின்
மிகைத்த சுக்கிலம் அன்றியே

வேறுஒன்று கண்டிலீர்
நகைக்குமாறு மனு
எரிக்கநாளும்நாளும்
நாடுவீர். 462

ஓதும்நாலு வேதமும் உரைத்த
சாத்திரங்களும்
பூதத்தத்து வங்களும்
பொருந்தும் ஆகமங்களும்
சாதிபேத உண்மையும்
தயங்குகின்ற நூல்களும்
பேதபேதம ஆகியே
பிறந்துஉழன்று இருந்ததே. 463

அங்கலிங்கம் பூண்டுநீர்
அகண்டபூசை செய்கிறீர்
அங்கலிங்கம் பூண்டுநீர்
அமர்ந்திருந்த மார்பனே

எங்கும்ஓடி எங்கும்எங்கும்
ஈடழிந்து மாய்கிறீர் 464
செங்கல்செம்பு கல்லெலலாம்
சிறந்துபார்க்கும் மூடரே.

தீட்டம்தீட்டம் என்றுநீர்
தினமும்மூழ்கும் மூடரே
தீட்டமாகி அல்லவோ
திரண்டுகாயம் ஆனதும்
பூட்டகாயம் உம்முளே
புகழுகின்ற பேயரே
தீட்டுவந்து கொண்டலோ
தெளிந்ததே சிவாயமே. 465

உந்திமேலே நாலுமூன்று
ஓம்நமசி வாயமாம்
சந்திசந்தி என்றுநீர்
சாற்றுகின்ற பேயரே
மூந்தவந்து நம்முளே

மூலநாடி ஊடுபோய்
அந்திசந்தி அற்றிடம்
அறிந்துணர்ந்து பாருமே. 466

வன்னிமூன்று தீயினில்
வாழும்எங்கள் நாதனும்
கன்னியான துள்ளிருக்கக்
காதல்கொண்டது எவ்விடம்
சென்னிநாலு கையிரண்டு
சிந்தையில் இரண்டிலொன்று
உன்னியுன்னி நம்முளே
உய்த்துணர்ந்து பாருமே. 467

தொண்டுசெய்து நீங்களும்
சூழஓடி மாள்கிறீர்
உண்டுஉழன்று நும்முளே
உற்றுணர்ந்து பார்க்கிலீர்
வண்டுலாவு சோலைசூழ
வாழும்எங்கள் நாதனும்

பண்டுபோல நும்முளே
பகுத்திருப்பன் ஈசனே. 468

பரம்உனக்கு எனக்குவேறு
பயம்இல்லை பாரையா
கரம்உனக்கு நித்தமும்
குவித்திடக் கடமையாம்
சிரமுருக்கி அமுதளித்த
சீருலாவும் நாதனே
உரம்எனக்கு நீஅளித்த
உண்மைஉண்மை
உண்மையே. 469

என்அகத்தில் என்னைநான்
எங்கும்ஓடி நாடினேன்
என்அகத்தில் என்னைஅன்றி
ஏதும்ஒன்று கண்டிலேன்
மின்எழுப்பி விண்ணகத்தின்

மின்ஒடுங்கு மாறுபோல்
என்அகத்துள் ஈசனோடு
யானும்அல்ல தில்லையே. 470
இடங்கள்பண்ணி
சுத்திசெய்தே இட்டபீட
மீதிலே
அடங்கநீறு பூசல்செய்து
அருந்தவங்கள் பண்ணுவீர்
ஒடுங்குகின்ற நாதனார்
உதிக்கும்ஞானம் எவ்விடம்?
அடங்குகின்றது எவ்விடம்?
அறிந்துபூசை செய்யுமே. 471
புத்தகங் களைசுமந்து
பொய்களைப் பிதற்றுவீர்.
செத்திடம் பிறந்திடம்
அதுஎங்ஙன்என்று அறிகிலீர்
அத்தனைய சிந்தனை

அறிந்துநோக்க வல்லீரேல்
உத்தமத்துள் ஆயசோதி
உணரும்போகம் ஆகுமே. 472
அருளிலே பிறந்துநின்று
மாயைரூபம் ஆகியே
இருளிலே தயங்குகின்ற
ஏழைமாந்தர் கேண்மினோ.
பொருளிலே தவம்புனைந்து
பொருந்திநோக்க வல்லீரேல்
மருள்அதுஏது? வன்னியின்
மறைந்ததே சிவாயமே. 473
தன்மசிந்தை ஆம்அளவும்
தவமறியாத் தன்மையாய்க்
கன்மசிந்தை வெயில்உழன்று
கருத்தழிந்த கசடரே,
சென்மம்சென்மம் தேடியும்
தெளிவொணாத செல்வனை

நன்மையாக உம்முளே 474
நயந்துகாண வேணுமே.
கள்ளவுள்ள மேயிருக்கக்
கடந்தஞானம் ஓதுவீர்
கள்ளம்உள் அறுத்தபோது
கதிஇதன்றிக் காண்கிலீர்?
உள்ளமே விளக்கிநித்தம்
ஒளியணுக வல்லீரேல்
தெள்ளு ஞானம் உம்முளே
சிறந்ததே சிவாயமே. 475
காணவேண்டும் என்றுநீர்
கடல்மலைகள் ஏறுவீர்
ஆணவம் அதல்லவோ
அறிவில்லாத மாந்தரே?
வேணும் என்று
அவ்வீசர்பாதம் மெய்யுளே
தரிப்பிரேல்

தாணுவாக நின்ற சீவன்
தான்சிவம் அதாகுமே. 476

தாணு - பரம்பொருள்

அணுவினோடு அகண்டமாய்
அளவிடாத சோதியைக்
குணமதாக உம்முளே
குறித்துநோக்கின் முத்தியாம்
மிணமிணென்று
விரலைஎண்ணி மீளொணா
மயக்கமாய்த்
துணிவிலாத படியினால்
தொடர்ந்து பூசை செய்குவீர். 477
எச்சில்எச்சில் என்றுநீர்
இடைந்திருக்கும் ஏழைகாள்
துச்சில்எச்சில் அல்லவோ
தூயகாயம் ஆனதும்

வைத்தெச்சில் தேனலோ,
வண்டின்எச்சில் பூவலோ?
கைச்சுதாடல் வைத்துடன்
கறந்தபாலும் எச்சிலே!
478

சுதா - பசுவின் முலைக்காம்பு

தீர்த்தலிங்க மூர்த்திஎன்று
தேடிஓடும் தீதரே
தீர்த்தலிங்கம் உள்ளில்நின்ற
சீவனைத் தெளியுமே
தீர்த்தலிங்கம் உம்முளே
தெளிந்துகாண வல்லீரேல்
தீர்த்தலிங்கம் தான்அதாய்ச்
சிறந்ததே சிவாயமே.
479

ஆடுகொண்டு கூறுசெய்து
அமர்ந்திருக்கும் ஆறுபோல்

தேடுகின்ற செம்பினைத்
திடப்படப் பரப்பியே
நாடுகின்ற தம்பிரானும்
நம்முளே இருக்கவே
போடுதர்ப்ப பூசைஎன்ன
பூசைஎன்ன பூசையோ? 480

என்னை அற்பநேரமும்
மறக்கிலாத நாதனே
ஏகனே இறைவனே இராசராச
ராசனே
உன்னை அற்ப நேரமும்
ஒழிந்திருக்க லாகுமே
உனதுநாமம் எனதுநாவில்
உதவிசெய்வீர் ஈசனே. 481

எல்லையற்று நின்றசோதி
ஏகமாய் எரிக்கவே
வல்லபூர ணப்பிரகாசர்

ஏகதபோகம் ஆகியே
நல்லஇன்பம் மோனசாக
ரத்திலே அழுத்தியே
நாடொணாத அமிர்தம்உண்டு
நான்அழிந்து நின்றநாள். 482

ஆனவாற தாயிடும்
அகண்டமான சோதியை
ஊனைகாட்டி உம்முளே
உகந்துகாண வல்லீரேல்
ஊனகாயம் ஆளலாம்
உலகபாரம் ஆளலாம்
கானநாடும் ஆளலாம்
வண்ணநாடர் ஆணையே. 483

நித்தமும் மணிதுலக்கி
நீடுமூலை புக்கிருந்து
வத்தியே கதறியே
கண்கள்மூடி என்பயன்?

எத்தனைபேர் எண்ணினும்
எட்டிரண்டும் பத்தலோ?
அத்தனுக்கிது ஏற்குமோ
அறிவிலாத மாந்தரே? 484

எட்டிரண்டும் கூடியே
இலிங்கமான தேவனை
மட்டதாக உம்முளே
மதித்துநோக்க வல்லீரேல்
கட்டமான பிறவிஎன்
கருங்கடல் கடக்கலாம்
இட்டமான ஒளியினோடு
இசைந்திருப்பீர் காண்மினே. 485

உண்மையான மந்திரம்
ஒளியிலே இருந்திடும்
தண்மையான மந்திரம்
சமைந்துரூபம் ஆகியே

வெண்மையான மந்திரம்
விளைந்துநீற தானேதே 486
உண்மையான மந்திரம்
அதொன்றுமே சிவாயமே.
தச்சுவாயில் உச்சிமேல்
ஆயிரம் தலங்களாய்
முச்சுடரும் மூவிரண்டும்
மூண்டெழுந்த தீச்சுடர்
வச்சிரம் அதாகியே
வளர்ந்துநின்றது எவ்விடம்?
இச்சுடரும் இந்திரியமும்
ஏகமானது எங்ஙனே? 487
481. ஏகன் -
தனிமுதன்மையானவன்

வல்லவாசல் ஒன்பதும்
மறுத்தடைத்த வாசலும்

சொல்லும்வாசல் ஓர்ஐந்தும்
சொல்லவிம்மி நின்றதும்
நல்லவாச லைத்திறந்து
ஞானவாசல் ஊடுபோய்
எல்லைவாசல் கண்டபின்
இனிப்பிறப்ப தில்லையே. 488

வண்டுபூ மணங்களோடு
வந்திருந்த தேன்எலாம்
உண்டுளே
அடங்கும்வண்ணம்
ஓதுலிங்க மூலமாய்க்
கண்டுகண்டு வேரிலே
கருத்தொடுங்க வல்லீரேல்
பண்டுகொண்ட வல்வினை
பறந்திடும் சிவாயமே. 489

ஓரெழுத்தில் லிங்கமாக
ஓதும்அக் கரத்துளே

ஓரெழுத்து இயங்குகின்ற
உண்மையை அறிகிலீர்
மூவெழுத்தும் மூவராய்
முளைத்தெழுந்த சோதியை
நாலெழுத்து நாவுளே
நவின்றதே சிவாயமே. 490

தூரதூர தூரமும்
தொடர்ந்தெழுந்த தூரமும்
பாரபார பாரம்என்று
பரிந்திருந்த பாவிகாள்!
நேரநேர நேரமும்
நினைந்திருக்க வல்லீரேல்
தூரதூர தூரமும்
தொடர்ந்துகூடல் ஆகுமே. 491
குண்டலங்கள் பூண்டுநீர்
குளங்கள்தோறும் மூழ்குறீர்

மண்டுகங்கள் போலநீர்
மனத்தின் மாசறுக்கிலீர்;
மண்டைஏந்து கையரை
மனத்திருந்த வல்லீரேல்
பண்டைமால் அயன்தொழப்
பணிந்து வாழலாகுமே. 492
மண்டுகம் - தவளை

கூடுகட்டி முட்டையிட்டுக்
கொண்டிருந்த வாறுபோல்
ஆடிரண்டு கன்றைஈன்ற
அம்பலத்துள் ஆடுதே;
மாடுகொண்டு
வெண்ணெய்உண்ணும்
மானிடப் பசுக்களே!
வீடுகண்டு கொண்டபின்பு
வெட்டவெளியும் காணுமே. 493

நட்டகல்லைத் தெய்வம்
என்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று
சொல்லுமந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ
நாதன்உள் இருக்கையில்!
சுட்டசட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ? 494

நானும்அல்ல நீயும்அல்ல
நாதன்அல்ல ஓதுவேன்
வானில்அல்ல சோதிஅல்ல
சோதிநம்முள் உள்ளதே
நானும்நீயும் ஒத்தபோது
நாடிகாண லாகுமோ?
தானதான தந்தான தாதனான
தானனா. 495

நல்லதல்ல கெட்டதல்ல

நடுவில்நிற்பது ஒன்றுதான்
நல்லதென்று போதது
நல்லதாகி நின்றபின்
நல்லதல்ல கெட்டதென்றால்
கெட்டதாகும் ஆதலால்
நல்லதென்ற நாடிநின்று
நாமம்சொல்ல வேண்டுமே. 496

பேய்கள்கூடிப்
பிணங்கள்தின்னும்
பிரியமில்லாக் காட்டிலே
நாய்கள்சுற்ற நடனமாடும்
நம்பன்வாழ்க்கை ஏதடா?
தாய்கள்பால் உதிக்கும்இச்சை
தவிரவேண்டி நாடினால்
நோய்கள்பட்டு உழல்வதேது
நோக்கிப்பாரும் உம்முளே. 497

நம்பன் - பரமேசுவரன்

உப்பைநீக்கில்
அழுகிப்போகும்
ஊற்றையாகும் உடலில்நீ
அப்பியாசை கொண்டிருக்கல்
ஆகுமோசொல் அறிவிலா
தப்பிலிப்பொய்
மானம்கெட்ட தடியனாகும்
மனமேகேள்;
ஒப்பிலாசெஞ் சடையனாகும்
ஒருவன்பாதம் உண்மையே. 498
பிறப்பதெல்லாம்
இறப்பதுண்டு பேதைமக்கள்
தெரிகிலாது
இறப்பதில்லை எனமகிழ்ந்து
எங்கள்உங்கள் சொத்தெனக்
குறிப்புப்பேசித் திரிவரன்றிக்

கொண்டகோலம்
என்னவோ?
நிறப்பும்பொந்தி
அழிந்தபோது நேசமாமோ 499
ஈசனே.

சுட்டெரித்த சாந்துபூசும்
சுந்தரப்பெண் மதிமுகத்
திட்டநெட்டு எழுந்தறியாது
ஏங்கிநோக்கு மதவலீர்
பெட்டகத்துப் பாம்புறங்கும்
பித்தலாட்டம் அறியிரோ?
கட்டவிழ்த்துப்
பிரமன்பார்க்கில் கதிஉமக்கும்
ஏதுகாண்? 500

வேதம்ஓது வேலையோ
வீணதாகும் பாரிலே!

காதகாத தூரம்ஓடிக்
காதல்பூசை வேணுமோ?
ஆதிநாதன் வெண்ணெய்
உண்டஅவனிருக்க
நம்முளே?
கோதுபூசை வேதம்ஏது 501
குறித்துப்பாரும் உம்முளே.
பரம்இலாதது எவ்விடம்?
பரம்இருப்பது எவ்விடம்?
அறம்இலாத பாவிகட்குப்
பரம்இலைஅது உண்மையே;
கரம்இருந்தும்
பொருளிருந்தும் அருளிலாத
போதது
பரம்இலாத சூனியமாம்
பாழ்நரகம் ஆகுமே. 502
மாதர்தோள் சேராததேவர்

மானிலத்தில் இல்லையே!
மாதர்தோள் புணர்ந்தபோது
மனிதர்வாழ்வு சிறக்குமே,
மாதராகும் சத்தியொன்று
மாட்டிக்கொண்ட தாதலால்
மாதராகும் நீலிகங்கை
மகிழ்துகொண்டான் ஈசனே. 503
நீலிகங்கை - நீல நிறம்
உடைய கங்கை.

சித்தர்என்றும் சிறியர்என்றும்
அறியொணாத சீவர்காள்!
சித்தர்இங்கு இருந்தபோது
பித்தர்என்று எண்ணுவீர்!
சித்தர்இங்கு இருந்தும் என்ன
பித்தன்நாட்டிருப் பாரோ?
அத்தன்நாடும் இந்தநாடும்

அவர்களுக்கெலா மொன்றே. 504
மாந்தர்வாழ்வு மண்ணிலே
மறந்தபோது விண்ணிலே
சாந்தனான ஆவியைச்
சரிப்படுத்த வல்லீரேல்
வேந்தன்ஆகி மன்றுளாடும்
விமலன்பாதம் காணலாம்
கூந்தலம்மை
கோணல்ஒன்றும்
குறிக்கொணாதி துண்மையே.
மன்று - மன்றம்; சபை;
விமலன் - மலமற்றவன் 505
சருகு - உதிர்ந்த இலை.

சருகருத்தி நீர்குடித்துச்
சாரல்வாழ் தவசிகாள்!
சருகருந்தில் தேகங்குன்றிச்

சஞ்சலம் உண்டாகுமே;
வருவிருந்தோடு
உண்டுஉடுத்தி வளர்மனை
சுகிப்பிரேல்
வருவிருந்தோன் ஈசனாகி
வாழ்வளிக்கும் சிவாயமே. 506

காடுமேடு குன்றுபள்ளம்
கானின்ஆறு அகற்றியும்
நாடுதேசம் விட்டலைவர்
நாதன்பாதம் காண்பரோ?
கூடுவிட்டு அகன்றுன்ஆவி
கூத்தனூர்க்கே நோக்கலால்
வீடுபெற்ற அரன்பதத்தில்
வீற்றிருப்பர் இல்லையே. 507

கட்டையால்செய் தேவரும்
கல்லினால்செய் தேவரும்

மட்டையால்செய் தேவரும்
மஞ்சளால்செய் தேவரும்
சட்டையால்செய் தேவரும்
சாணியால்செய் தேவரும்
வெட்டவெளிய தன்றிமற்று 508
வேறுதெய்வம் இல்லையே.

தங்கள்தேகம் நோய்ப்பெறின்
தனைப்பிடாரி கோயிலில்
பொங்கல்வைத்து
ஆடுகோழிப் பூசைப்பலியை
இட்டிட
நங்கச்சொல்லு நலிமிகுந்து
நாளும்தேய்ந்து மூஞ்சூராய்
உங்கள்குலத்துத்
தெய்வம்உம்மை
உருக்குலைப்ப தில்லையே. 509

ஆசைகொண்டு அனுதினமும்

அன்னியர் பொருளினை
மோசம்செய்து அபகரிக்க
முற்றிலும் அலைபவர்
பூசையோடு நேமநிட்டை
பூரிக்கச்செய் பாதகர்
காசினியில் எழுநரகைக்
காத்திருப்பது உண்மையே. 510

நேசமுற்றுப் பூசைசெய்து
நீறுபூசிச் சந்தனம்
வாசமோடு அணிந்துநெற்றி
மைதிலகம் இட்டுமே
மோசம்பொய் புனைசுருட்டு
முற்றிலும்செய் மூடர்காள்
வேசரிகளம் புரண்டவெண்
ணீறாகும் மேனியே. 511

வாதம்செய்வேன்
வெள்ளியும்

பொன்மாற்றுயர்ந்த தங்கமும்
போதவே குருமுடிச்சுப்
பொன்பணங்கள் தரவெனச்
சாதனைசெய் தெத்திச்சொத்து
தந்தைக்க வர்ந்ததுமே
காததூரம் ஓடிச்செல்வர்
காண்பதும் அருமையே. 512

யோகசாலை காட்டுவார்
உயரவும் எழும்புவார்
வேகமாக அட்டசித்து
வித்தைகற்று நெட்டுவார்
மோகம்கொண்டு மாதரின்
மூத்திரப்பை சிக்கிப்பின்
பேயது பிடித்தவர்போல்
பேருலகில் சாவரே. 513

காயகாயம் உண்பதாகக்
கண்டவர் மதித்திட

மாயவித்தை செய்வதுஎங்கு
மடிப்புமோசம் செய்பவர்
நேரமாகக் கஞ்சாஅடித்து
நேர்அபினையைத் தின்பதால்
நாயதாக நக்கிமுக்கி
நாட்டினில் அலைவரே. 514

நீரினில் குமிழிஒத்த
நிலையிலாத காயம்என்று
ஊரினில் பறைஅடித்து
ஊதாரியாய்த் திரிபவர்
சீரினில் உனக்குஞான
சித்திசெய்வேன் பாரென
நேரினில் பிறர்பொருளை
நீளவும்கைப் பற்றுவார். 515

காவியும் சடைமுடி
கமண்டலங்கள் ஆசனம்
தாவுருத்தி ராட்சம்யோக

தண்டுகொண்ட மாடுகள்
தேவியை அலையவிட்டுத்
தேசம்எங்கும் சுற்றியே
பாவியென்ன வீடெலாம்
பருக்கைகேட்டு அலைவரை. 516
முத்திசேரச் சித்திஇங்கு
முன்னளிப்பேன் பாரெனக்
சத்தியங்கள் சொல்லிஎங்கும்
சாமிவேடம் பூண்டவர்
நித்தியம் வயிறுவளர்க்க
நீதிஞானம் பேசியே
பத்தியாய்ப் பணம்பறித்துப்
பாழ்நரகில் வீழ்வரேல். 517
செம்மைசேர் மரத்திலே
சிலைதலைகள் செய்கிறீர்
கொம்மையற்ற
கிளையில்பாத குறடுசெய்து

அழிக்கிறீர்
நும்முளே விளங்குவோனை
நாடிநோக்க வல்லீரேல்
இம்மலமும் மும்மலமும்
எம்மலமும் அல்லவே. 518

எத்திசைஎங்கும் எங்கும்ஓடி
எண்ணிலாத நதிகளில்
சுற்றியும் தலைமுழுகச்
சுத்தஞானி யாவரோ?
பத்தியோடு அரன்பதம்
பணிந்திடாத பாவிகாள்;
முத்திஇன்றி பாழ்நரகில்
மூழ்கிநொந்து அலைவரே. 519

கல்லுவெள்ளி செம்பிரும்பு
காய்ந்திடும் தராக்களில்
வல்லதேவ ரூபபேதம்
அங்கமைத்துப் போற்றிடில்

தொல்லைஅற் றிடம்பெரும்
சுகந்தருமோ சொல்லுவீர்?
இல்லைஇல்லை
இல்லைஇல்லை ஈசன்ஆணை
இல்லையே. 520

இச்சகம் சனித்ததுவும்
ஈசனைஐந்து எழுத்திலே
மெச்சவம் சராசரங்கள்
மேவும்ஐந்து எழுத்திலே
உச்சிதப் பலஉயிர்கள்
ஓங்கல்அஞ் செழுத்திலே
நிச்சயமெய்ஞ் ஞானபோதம்
நிற்கும்ஐந் தெழுத்திலே. 521

சாத்திரங்கள்
பார்த்துப்பார்த்துத் தான்குருடு
ஆவதால்

நேத்திரங்கெட
வெய்யோனை நேர்துதிசெய்
மூடர்காள்
பாத்திரம் அறிந்துமோன
பக்திசெய்ய வல்லீரேல்
சூத்திரப்படி யாவரும்
சுத்தர்ஆவர் அங்ஙனே. 522

மனவுறுதி தானிலாத
மட்டிப்பிணை மாடுகள்
சினமுறப் பிறர்பொருளைச்
சேகரித்து வைத்ததைத்
தினந்தினம் ஊர்எங்கும்
சுற்றிதிண்டிக்கே அலைபவர்
இனமதில் பலரும்வையும்
இன்பம் அற்ற பாவிகள். 523

சிவாயவசி என்னவும்
செபிக்கஇச் சகம்எலாம்

சிவாயவசி என்னவும்
செபிக்கயாவும் சித்தியாம்
சிவாயவசி என்னவும்
செபிக்கவானம் ஆளலாம்
சிவாயவசி என்பதே
இருதலைத்தீ ஆகுமே. 524

---

This file is last updated on 20 March 2007.
Feel free to send corrections and comments to the webmaster.